ஜகன் மோகினி

18

மார்ச்
1951.

JAGAN MOHINI

ESTD. 1923

அணா
நான்கு



OFFICE OF THE REGISTRAR ... MADRAS
3L
N211 N22M
N51.28.3

விஜயா வின்...
பாதாள பைரவி
தமிழ்...
Produced by - NAGI REDDI - CHAKRAPANI...

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு - திருவள்ளுவர்

ஜகன்மோகினி யென்னுஞ் சஞ்சிகையைக் கற்க
ஜகன்மோகினி! மனத்தைச் சார்ந்து.
- வீராகவ கவி

Vol. 28 No. 3. | விக்ருதி ஞு மாசி மீ | March. 1951.

பங்குனி விசாகம்

பங்குனியில் விசாகம் ஒப்பிலா நன்னாள்! நான்மறையோர் கொண்டாடும் திருநாள். எப்புவியும் பேசு புகழ் அண்ணங்கராரியர் தேசுடனே தோன்றிய சிறப்பு பெற்ற நாள்.

நாளது விக்ருதியாண்டு பங்குனித் திங்கள் விசாக நக்ஷத்திர சுபதினத்தில் (27-3-1951) முடும்பை ஸ்ரீவத்ஸகுலதிலகர் ஸ்ரீ காஞ்சி ப்ர. அ. ஸ்வாமியின் ஷஷ்டி அப்த பூர்த்தி மஹோத்ஸவம் சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது. காஞ்சியிலும் சென்னையிலுமாக மார்ச்சு 21உ முதல் ஏப்ரல் 1உ வரை குதூகலத்துடன் விழா நடத்த அன்பர் குழாம் ஏற்பாடு செய்து வருகிறது. ஸ்வாமியிடத்தில் உள்ளன்புடையோர் அனைவரும் ஷை வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமென்றும், நிரந்தரமான அம்சங்களைக் கொண்டுள்ள ஞாபகார்த்த திட்டத்திற்கு உதவவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம்.

ஷஷ்டி அப்த பூர்த்தி ஞாபகார்த்த நிதியிலிருந்து கீழ்க்கண்ட நிரந்தரமான பலனுடைய பணிகளைச் செய்வதாகத் திட்டமிட்டிருக்கிறார்கள். (1) சென்னையில் உபந்யாஸ மண்டபம் ஸ்தாபிப்பது; (2) சென்னை ஸர்வகலாசாலையில் விசிஷ்டாத்வைத சித்தாந்த சொற்பொழிவு ஏற்பாடுகள் நிரந்தரமாக நிறுவுவது; (3) ஷை சித்தாந்தத்தைப் பள்ளிகளில் கற்பிக்க ஏற்பாடு செய்வது; (4) தமிழ், தெலுங்கு, ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய பாஷைகளில் ஷை சித்தாந்த ப்ரசாரத்திற்கு ஒரு நிரந்தர ஏற்பாடு செய்வது; (5) மதஸம்பந்தமான வாசகசாலைகளை நிறுவுவது; (6) மத ஸம்பந்தமான பிரசுரங்களை வெளியிடுவது; (7) காஞ்சீ நம்பிள்ளை சந்நிதியின் சாசுவத கைங்கர்ய ஏற்பாடுகள் செய்வது ஆக, அவச்யம் ஆதரிக்கவேண்டிய ஏழு அம்சங்கள்.

ஷஷ்டி அப்த பூர்த்தி ஞாபகார்த்த நிதியானது ஒரு சாஸ்வத நிதியாகவிருந்து ஆஸ்திகர்களின் பொருளுதவியை என்றென்றும் பெற்று ஷை லக்ஷ்யங்களை ஈடேறச் செய்வதில் உதவும். சுமார் 3 லக்ஷம் ரூபாயாவது சேர்ந்தால்தான் ஷை திட்டப்படி நிரந்தர ஏற்பாடுகள் செய்ய இயலும். ஆகையால் ஷஷ்டியப்தபூர்த்திக்கு முன்போ, பின்போ எப்போது சௌகர்யப்பட்டாலும் ஷை நிதிக்குத் தாராளமாக திரவியசகாயம் செய்து புனித கைங்கர்யத்தில் பங்கெடுத்துக் கொள்ளும்படி கோருகிறோம். நிதியின் காரியதரிசி C. ராதா கிருஷ்ணய்யா, 147 அண்ணா பிள்ளைத் தெரு, சென்னை 1. என்ற விலாஸத்துக்கு சக்தியானுஸாரம் அனுப்பி ரசீது பெறவும்.

ஸ்வாமியின் பெருமையைப் பற்றியோ லக்ஷியங்களை ஈடேற்று வதின் அவச்யத்தைப் பற்றியோ அறிஞர்களான மோகினி அன்பர் களுக்கு அதிகம் எடுத்துரைக்கவேண்டியதில்லை. தமிழ், தெலுங்கு, ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி ஆகிய நான்கு பாஷைகளிலும் பத்திரிகைகளும் புத்தகங்களும் வெளியிட்டு, அம்ருதவர்ஷம்போன்ற சொற்பொழிவு களையும் செய்து, "பூர்வாசார்ய ஸம்ப்ரதாயாவதாரர் என்று உரிய புகழ் பெற்றுள்ள மஹாசார்யரின் ஜன்ம விழாவைக் கொண்டாடுவதில் குதூகலம் கொள்ளுதல் ஆஸ்திகர்களின் இயற்கையன்றோ!

அதுவும், இந்தத் தலைமுறையினர் பாக்கியசாலிகள். ஏனெனில் அறிஞர்களை அவர்களது ஜீவியகாலத்திலேயே சிறப்பித்துக் குதூ கலிக்கும் பேறுபெற்றவர் நாம். நம் சமுதாயம் ஆத்மீக விஷயங்களில் விருத்தியடைந்து வருவதற்கு இது ஒரு சான்று. மேன்மேலும் நமது வாழ்வு புனிதமடைய ஸ்ரீ ப்ர. அ. ஸ்வாமிக்கு பகவான் தகுந்த தேக ஆரோக்கியத்தை அளித்து ரக்ஷிப்பாராக! எழுத்தாலும், பேச்சாலும், அனுட்டானத்தாலும் லோகோபகாரமான காரியங்களையே நாடோறும் செய்துவரும் நம் ஸ்வாமிக்கு ஸதாஸர்வதா நாம், பெரியாழ்வார் எம்பெருமானுக்கு மங்களாசாஸனம் செய்ததுபோல், பல்லாண்டுபாடக் கடமைபட்டுள்ளோம்.

—வை. மு. ஸ்ரீ.

அபூர்வ ராமாயணம்

7. சாரித்ரேண ச கோ யுக்த:?

ஸ்ரீ ப்ர. ப. அண்ணங்கராசாரியர்

சென்ற இதழ் தொடர்ச்சி.

வான்மீகி நாரத ஸம்வாதத்தில் ஆறு வினாக்கள் கீழே விவ ரிக்கப்பட்டன. இனி சாரித்ரேண ச கோ யுக்த:? என்கிற ஏழாவது வினாவின் விவரணம் செய்வோம்.

சாரித்ரமாவது நன்னடத்தை, நல்லொழுக்கம்; அத்தோடு கூடியவன் யாவன்? என்பது வினா. நல்லொழுக்கமென்பது பொதுப்பெயர். பெரியார்களைப் பணிதல், தந்தைதாய்பேணுதல், சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட கருமங்களை வழுவறச் செய்தல், தெய்வபக்தியுடைமை, பிறரை நலியாமை, பிறர்பொருள் தாரமென்றி வற்றை நெஞ்சாலும் நினையாமை என்று இனையவொழுக்கங்களுக் குப் பொதுப்படையான பெயர் சாரித்ரமென்பது. சரித்ரமென்னுஞ் சொல்லே சாரித்ரமென நீண்டது. இவையெல்லாம் நாம் இராம பிரான் பக்கலில் செவ்வனே குடிகொண்டிருக்கு மழகை முறையே அநுபவிப்போம்.

பெரியார்களைப் பணிதல்:—உலகிலுள்ள மனிதர்களை நாம் மூன்று வகுப்பாகப் பிரிக்கலாம்; நம்மைவிட மிகப்பெரியார், நம் மோடொத்தவர், நம்மைவிடத் தாழ்ந்தவர்கள் என்று. இம் மூவகுப்பில் நம்மைவிடத் தாழ்ந்திருப்பவர்கள் சிலரோ பலரோ இருப்பதாகக் கொள்ளுவதற்கு நாம் உரிமையுடையோமல்லோம்; ஏனெனில், எல்லாரையுங் காட்டிலும் நாமே மிகச் சிறியோம்

சென்னை 600 008

என்று அநுசந்தானம் செய்வதே நமது கடமையாகுமாதலால் நம்மைவிடச் சிறியார் சிலர்பலருளரென்று கொள்ளுதல் தகுதியற் றதேயாம்; ஆயினும், ஸம்ஸாரவாழ்க்கையில் நம்முடைய மக்கள், மற்றும் பணிவிடைக்காரர்கள் முதலானோரை நம்மைக்காட்டிலும் பெரியவர்களாகவோ நம்மோடொத்தவர்களாகவோ நாம் நினைப்ப தில்லை, நினைப்பது தகுதியுமன்று; ஆகவே நம்மிலுங் கீழ்ப்பட்ட வர்கள் என்கிற வொரு வகுப்பு கொள்ளத்தக்கதேயாம். ஆகவே, உயர்ந்தவர்கள் ஒத்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்று மூன்று வகுப்புக்கள் உள்ளனவாகக் கொள்வதில் குறையில்லை யென்பர். இராமபிரான் உண்மையில் ஸ்ரீமந்நாராயண மூர்த்தியாகையாலே உலகமெல்லாம் அவற்கு அடிமைப்பட்டதான முறையில் கீழ்ப்பட் டிருக்குமேயல்லது அவனிலும் மேம்பட்டவரோ அவனோடொத் தவரோ ஒருவருமிருக்க ப்ரஸக்தியில்லை. ஆயினும் "ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்" என்று மானிடவேடம் பூண்டு நடிக்குமிவ்வவதாரத்தில் தன்னில் மிக்காரையும் தன்னோ டொத்தாரையும் திருவுள்ளத்திற் கொண்டிருப்பது காண்கிறோம். பெரியாரைப் பணிதல் என்கிற பரமதர்மத்தை யனுட்டித்துக் காட்டுதற்கென்றே இராமபிரானது திருவவதாரமென்று தெரி கிறது. இராமன் செய்திருக்கிற காரியம் எதுவாயினும் பெரியா ருடைய நியமனத்தைச் சிரமேற்கொண்டே செய்ததாகக் காண் கிறது. இதற்குச் சார்பாகச் சில விஷயங்களை யீண்டெடுத்துக் காட்டுவோம்;

இராமன் செய்த செயல்களில் முதற்செயல் தாடகாவதம். பெண்கொலை பெரும் பாதகமென்று உலகம் பகரும். இஃது இராமபிரா னறியமாட்டாத தன்று. அறிந்திருந்தும் இப்பெண் கொலையை ஏன் செய்தனன்? சூர்ப்பணகைக்குச் செய்த அங்கபங் கத்தை தாடைகைக்குச் செய்துவிட்டு, சூர்ப்பணகையை முடித் திருக்கலாமே; அவளை உயிரோடு விட்டதனாலல்லவோ அவள் இலங்கைக்கேகி இராவணனைத் தூண்டி ஸீதாபஹரணம் முதலிய கஷ்டங்களை விளைத்தனள். அவளுயிரையே மாய்த்திருந்தால் ஒரு வருத்தமுமில்லையே. தாடகையை அங்கபங்கஞ்செய்து துரத் தியிருந்தாலும் விச்வாமித்திரமுனிவருடையவேள்வி இனிதுமுடிவு பெற்றிருக்குமன்றோ. அவளைக் கொலை செய்திருக்கவேண்டிய அவசியமில்லையே. இப்படி பொருந்தாத செய்கைகளை இராமன் ஏன் செய்தனன்? என்று இத்தகைய கேள்விகளைப் பலர்கேட்ப துண்டு. விச்வாமித்திரமுனிவர் தாடகையைக்காட்டி 'இவளைக் கொலைசெய்' என்று கட்டளையிடவேதான் அது பெண்கொலை யென்றும் பாராது செய்தனன். சூர்ப்பணகை வந்தகாலத்து அவளை வதை செய்யுமாறு நியமிக்க அங்கு ஒரு பெரியாருமில் லாமை பற்றியே அவளைக் கொலை செய்யாது அங்கபங்கத்தோடு நிறுத்தினன். இதனால், பெரியார்களைப்பணிதலும் அவர்களது கட்டளையின்படி நடத்தலுமே இராமனது விரதமென்று அறிய லாகும்.

அன்றியும், இராமன் விச்வாமித்திர முனிவரை நோக்கி

"இமௌ ஸ்ம முநிசார்தூல! கிங்கரௌ ஸமுபஸ்திதௌ, ஆஜ்ஞாபய யதேஷ்டம் வை சாஸநம் கரவாவ கிம்!"

என்று கூறியுள்ளதும் குறிக்கொள்ளத்தக்கது: 'முனிவர் கோமானே! நானும் என்தம்பி இலக்குமனும் தேவரீர் ஏவின பணிவிடைகளைச் செய்யக்காத்திருக்கின்றோம்; நாங்கள் செய்யக் கூடியதைத் திருவுள்ளமானபடி கட்டளையிட்டருளலாம்' என வேண்டுதல் மேலே குறித்த சுலோகத்திலுள்ளது. இதனாலும் பெரியாரைப்பணிதலிலேயே இராகவன் பரம குதூஹலம் வாய்ந் தவனென்பது நன்கு புலனாகும்.

இங்ஙனே பாலகாண்ட கதையொன்று காட்டினது போல முடிவான யுத்தகாண்டகதை யொன்றுங் காட்டிநிற்போம். இராவணவதம் முடிந்து அவனுக்கு ஈமக்கடனும் செய்தற்ற பின்பு விபீஷணாழ்வான் இராமனை நோக்கி வேண்டிக்கொண்டான்: "ஸ்வாமிந்! இலங்கையிற்புகுந்து இனிது வாழ்ந்து நன்னீராடி நல்லுடையுடுத்துச் சிரமபரிஹாரம் செவ்வனே செய்துகொண்டு புறப்படலாம்; இவ்வளவு அனுக்கிரகம் செய்தருளவேணும்" என்றான்; அதற்கு இராமன்,

"ந மே ஸ்நாநம் பஹுமதம் வஸ்த்ராணி ஆபரணாநி ச,
தம் விநா கைகயீபுத்ரம் பரதம் தர்மசாரிணம்"

[தம்பி பரதன் துடித்துக்கொண்டிருக்க எனக்கு இங்கே நீராட்டமோ பீதாம்பரமணிதலோ திருவாபரணம் பூணுதலோ எதுவும் எனக்கு ருசிக்கமாட்டாது] என்று சொல்லி, பரதனுக்குக் கெடுவிட்டுக் கொடுத்திருந்தபடி பதினான்கு வருடம் பூர்த்தி யானதையுங்கொண்டு உடனே அயோத்திக்குப்புறப்பட்டேயாக வேணுமென்றுசொல்லி விபீடணன் கொணர்ந்த புஷ்பகவிமானத் திலேறி அயோத்திக்குச் செல்லுகையில் பரத்வாஜமுனிவரின் ஆச்சிரமத்தில் அவரைக் காண நேரிட்டது; அப்போது அம் முனிவர் இராமனைநோக்கி 'இன்று நீ இங்கு நான் செய்கிற ஆராதனையை ஏற்றுக் கொண்டு நாளைக்குத்தான் அயோத்தி செல்லவேண்டும்' என்று கட்டளையிட, அதனை மீறமாட்டாது அதற்குக் குறுக்காக ஒரு பேச்சும் பேசாமல் அங்ஙனமே இசைந் திருந்தனன் என்பது யுத்தகாண்டம் நூற்றிருபத்தேழாவது ஸர்க் கத்தில் பேசப்பட்டுள்ளது. "பரத்வாஜஸ்ய சாஸநாத்" என்று, அப்பெரியாருடைய கட்டளை இராமனுக்கு மீறவொண்ணாததா யிருந்தது.

இப்படி ஸ்ரீராமாயணத்தில் "பிதுர்வசந நிர்தேசாத்" என்றும் "விச்வாமித்ரஸ்ய வசநாத்" என்றும் "அகஸ்த்ய வசநாச்சைவ" என்றும் "பரத்வாஜஸ்ய சாஸநாத்" என்றும் இங்ஙனே பல பிர மாணங்களினால் இராமனது செயல்களுக்கெல்லாம்பெரியார்களின் நியமனமே காரணமாகக் காட்டப்பட்டுள்ளது காண்க.

இதற்குமேல் ஒரு சிறு கேள்வி தோன்றும்; இராமன் இப் படி பெரியார்களின் சொல்லைத்தவறாது நடப்பவனாயின் சித்திர கூடத்திற்கு வந்துசேர்ந்த வஸிஷ்டபகவான் ஜாபாலிமுனிவர் முதலான பெரியார்கள் அயோத்திக்கு மீண்டுவரும்படி வன்மை யாகக் கட்டளையிட்டும் இராமன் அதற்கு உடன்படாதது என்? என்று. இதற்குக் கேண்மின். பெரியார்களில் தலைவரான தந்தை தாயர் கட்டளையினாலல்லவோ இராமன் வனவாஸம் புறப்பட்டது;

"ஆழிசூ ழுலக மெல்லாம் பரதனே யாள நீ போய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப் புண்ணியப் புனல்க ளாடி
ஏழிரண் டாண்டின் வாவென்று"

அவர்களிட்டகட்டளையை நிறைவேற்றியாகவேண்டியது ப்ராப்தம். இதற்கு மாருக வேறு பெரியார் வேறு கட்டளையிட்டால் அதனையும் நிறைவேற்றுவது நியாயமாகாது.

அப்படியானல், வஸிஷ்டர் ஜாபாலி முதலான பெரியாருடைய பேச்சுக்கிணங்கி அயோத்திக்குத் திரும்புதலும், அயோத்தி சேர்ந்தபின் மற்றுஞ் சில பெரியார் வந்து 'இராமா! இப்படி நீ திரும்பிவந்தது தகுதியன்றே, தந்தை தாயர் கட்டளையை முற்றும் நிறைவேற்ருது மீண்டு வந்துவிடலாமா? திரும்பவும் கானகமே செல்வாயாக' என்று கூறினல் அப்பெரியாரது வார்த்தைக் கிணங்கி மறுபடியும் கானகம் புறப்படுதலும், மீண்டும் அங்குச் சில பெரியார்வந்து வேண்ட (அல்லது) நியமிக்க அயோத்திக்குத் திரும்புதலுமாய் ஒரு வியவஸ்தையில்லை யாகுமன்ருே! ஆகவே மேழே செய்த ஆக்ஷேபம் யுக்தமன்று.

சாரித்ர மென்பதற்குப் பொருளாக நாம் கூறியவற்றில் முதற் பொருளை இவ்வளவாக விவரித்தோம். இனி இரண்டாவது பொருளான தந்தைதாய்ப் பேணுதல் என்பது தனிப்பட விவரிக்க வேண்டாததாயினும் சிறிதே விவரிப்போம்......இராமனுக்குத் தந்தைதாயரிடத்துப் பக்தி அபரிமிதமானது. உபநிஷத்தில் **"மாத்ருதேவோபவ"** என்று சொல்லிப் பிறகே **"பித்ருதேவோபவ"** என்று சொல்லியிருத்தலால் பித்ரு பக்தியிற் காட்டிலும் மாத்ரு பக்தியே மிகச் சிறந்துவிளங்கும் இராமன் பக்கலில். அதிலும், பெற்ற தாயான கௌஸல்யையினும் மாற்றுத்தாயான கைகேயியிடத்தில் அதிக பக்திவாய்ந்தவன். இஃது எங்ஙனே தெரிகின்றதென்னில், வநவாஸஞ் செய்துகொண்டிருக்கையில் இளையோன் அடிக்கடி கைகேயியைக் கடிந்து பேசுவன். பரதாழ்வானுடைய ப்ரசம்ஸையைஇராமபிரான்செய்யுமளவில்" இப்படி மஹாகுணசாலியான பரதனுக்குக் கொடிய பாதகியான கைகேயி எங்ஙனம் மாதாவாய் வாய்த்தாளோ?" என்று பேசத்தொடங்கி அந்த பரத ப்ரசம்ஸையைக் கைகேயி நிந்தனையில் கொண்டுமுடிப்பது லக்ஷ்மணனது வழக்கம். அப்போது இராமன் சொல்லும் வார்த்தை யாதெனில்,

"ந தேம்பா மத்யமா தாத! கர்ஹிதவ்யா கதஞ்சந,
தாமேவஇக்ஷ்வாகு நாதஸ்ய பரதஸ்ய கதாம் குரு"

என்றே சொல்லுவது. [லக்ஷ்மண! நீயோ ஒருவிதத்திலும் கைகேயியை நிந்திக்கலாகாது; இக்ஷ்வாகு குலதிலகனை நம்தம்பி பரதனுடைய கதையை நீ எவ்வளவு சொன்னலும் அவ்வமுதத்தையே செவி யாரப் பருகுவேன்] என்பது மேலெடுத்த சுலோகத்தின் கருத்து. இதனல் மாத்ருபக்தி நன்கு விளங்கும்.(தொடரும்)

ஜகன்மோகினி
தனிப் பிரதி அணு 4.
வருடச் சந்தா 3—0—0.

காரிருளில் ஒரு கைவிளக்கு

பி. ஸ்ரீ.

ஒரு பெரிய நிலப்பகுதி, அங்கே அலைந்து திரிந்தான் யாத்திரிகன், தங்குமிடம் எங்குகிடைக்கும் என்று. வடக்கே பார்த்தான். கிழக்கே நோக்கினான். தெற்கே திரும்பினான். மேற்கே பார்வையைத் திருப்பினான். உலர்ந்த நாவைக்கொண்டு வருணித்தான் அந்தப் பிரதேசத்தை, 'மணல், மணல், மணல், மணல்!' என்று.

'இந்தப் பாலைவனத்திலே ஒரு பசும்புல் தரையும் உண்டோ?' என்று தேடித் தவித்தான். கடைசியாக, பாழான மணற்குன்றில் ஒரு தேவாலயம் கண்டான், சிலதந்துகிடந்த பாழுங் கோயில். ஊளையிடும் ஊதைக் காற்றின் தங்குமிடம். ஏங்கிப் பெருமூச்சுவிடுகிறான் யாத்திரிகன், 'ஐயோ, ஐயோ!' என்று.

இடி யிடிக்கிறது. யாத்திரிகா, பயப்படாதே; கோதிலா மாரி பொழியுமென்கிறது கோடையிடி. பாலைவனம் சோலைவனமாகுமென்று இயற்கை பாடுகிறது, இடிபோடும் தாளத்திற்கு இசைய.

இந்த ரீதியில் அமைந்திருக்கிறது ஒரு பிரபந்தம். பழைய பிரபந்தமல்ல. ஒரு புதுமைப் பிரபந்தம்தான். 1922-ல் தோன்றிய பிரபந்தம். ஏதோ ஒரு இந்திய பாஷையில் தோன்றியதல்ல. ஆங்கில பாஷையில் பிறந்தது. சாதாரண ஆங்கில எழுத்தாளன் எழுதியதல்ல. 1948-ல் இலக்கியத்திற்காக நோபேல் பரிசு பெற்ற தாமஸ் எலியட் என்ற உலகப் புகழ்பெற்ற உத்தமர் பாடிய பிரபந்தம், இது. 'சாந்தி, சாந்தி, சாந்தி:' என்ற ஸம்ஸ்கிருத மந்திரச்சொற்களோடு முற்றுப்பெறுகின்றது. அதிசயமான பிரபந்தம் என்று நினைக்கிறீர்களா?

இது, இருபதாம் நூற்றாண்டின் மிகவும் சக்திவாய்ந்த காவியம் என்று மேற்புல நல்லறிஞரால் போற்றப்பெறுகின்றது. 'பாழும் பூமி' (The Waste Land) என்றபெயர் வாய்ந்தது, இப்பெருநூல்.

இந்த யுகத்தைப்பிரதிபலித்துக் காட்டும் கவிதைக் கண்ணாடி. இக்கண்ணாடியில் நவநாகரிக புருஷர்களும் நங்கையருமாகிய நாம் முகம் பார்த்துக்கொள்ளலாம். முகத்தை மட்டுமா, அகத்தையும் காட்டும் கண்ணாடி. பிரதிபிம்பம் விநோதமாகவும் சற்றுக் கோரமாகவும் தெரிகிறது. என்றாலும் நம்முடைய மூஞ்சி; நம்முடைய நாகரிக நகரங்களின் அருமைத் திருமுகம்தான்! ஏதோ ஒரு பயங்கரமான சொப்பனத்திலே, யாரோ ஒரு துர்வாஸர் 'அரக்கனாய்ப் போ!' என்று சபித்துவிட்ட மாதிரி விழிக்கின்றன கண்ணும் முகமும். அணுக்குண்டு யுகத்திலே அஞ்சிச் சுரம்பிடித்துக் கிடக்கும் பேர்வழியின் ஆத்மசித்திரம் இது.

இந்த யுகத்தைச் சேர்ந்த கவிராயர்தான் தாமஸ் எலியட். ஆனால் பாழும் பூமியைப் பையப்பையக் கடந்து எல்லைப்புறக் குன்றிலே பாழுங்கோயில் கண்டு அதை ஒருவாறு செப்பனிட்டுக் கொண்டிருக்கிறார் தமக்காக. இந்த நிலையில் கருமேகங்கண்டு இடிக்குரல் கேட்டு,

> ***"ஆழி மழைக்கண்ணா, ஒன்றும் நீ கைகரவேல்!..........***
> ***வாழ உலகினில் பெய்திடாய்"***

என்று பிரார்த்திப்பதுபோல் 'சாந்தி' சொல்லுகிறார் உலகிற்கு.

நவநாகரிகத்தின் நன்மை தீமைகளை இந்தியர்களாகிய நாமும் அனுபவித்து வருகிறோம். ரயில், தந்தி, ரேடியோ, ஆகாயவிமானம்,

அணுக்குண்டு முதலான விஞ்ஞான விந்தைகளெல்லாம் நம்மையும் பரவசமாக்குகின்றன, பயமுறுத்துகின்றன.

அந்தக் காலத்திலே தொண்டரடிப்பொடியாழ்வார்,

“பொய்யனேன் வந்து நின்றேன்,
பொய்யனேன், பொய்ய னேனே!”

என்று ஸ்ரீரங்கநாதனை நோக்கி முறையிட்டுக்கொண்டார். அரங்கன் இருந்த அந்தத் திசையிலே பொய் நிற்கமுடியாதல்லவா?— எனவே மற்ற மூன்று திசைகளிலும் பொய் தம்மைச் சுற்றிநிற்பதாகச் சொல்லிக்கொண்டார். நம்மையோ நாலு திசைகளிலும் சூழ்ந்து மோதுகிறது பொய்ம்மை, பாலைவன யாத்திரிகனை மணல் சூழ்ந்துகொண்டதுபோலே.

இடுங்கிய கண்ணால் நாலுதிசையும் நோக்கி, உலர்ந்த நெஞ்சாலும் நாவாலும் ‘பொய், பொய், பொய் பொய்’ என்று நாமும் வர்ணிக்கவேண்டியிருக்கிறது தற்கால உலகை, அந்த யாத்திரிகன் ‘மணல், மணல், மணல், மணல்!’ என்று தான் கண்ட பாலைவன உலகை வர்ணித்தது போலே. இத்தகைய உலகிலே— பாலைவனப் பொய்வாழ்க்கையிலே,

பெய்யு மாமழை போல்வண்ணா! (ஆண்டாள்)
குன்றுடு கொழுமுகில்போல் (பெரியாழ்வார்)
பருவக் கருமுகில் ஒத்து (திருமங்கையாழ்வார்)

என்றெல்லாம் பரம பக்தமணிகள் சுட்டிக்காட்டும் கருணைமழைதான், அன்று போல் இன்றும் ஆத்மதாபத்தையும் ஆத்மதாகத்தையும் போக்கவல்லது.

அந்தப் பரமபக்தர்களின் மணிமொழிகளை வியாக்கியான சக்ரவர்த்தியான பெரியவாச்சான்பிள்ளை ‘உருகி வழிந்து புறப்பட்ட சொல்’ என்கிறார். இதைப் பூர்த்தியாக உருகி அனுபவிக்குமாறு வியாக்கியான மிட்டருளியவர் அதே வியாக்கியான சக்ரவர்த்தி. வேறு வியாக்கியானங்களும், சில, பலபகுதிகளை அறிந்து அனுபவிக்க உதவும்படி, நஞ்சீயர், வடக்குத் திருவீதிப்பிள்ளை, மணவாளமாமுனிகள், பெரிய பரகாலஸ்வாமி முதலானவர்களால் அருளப்பெற்றிருக்கின்றன.

பழைய வியாக்கியானங்கள் வடமொழியும் தமிழும் விரவிய மணிப்பிரவாள நடையில் கம்பீரமாக அமைந்துள்ளன. அவர்களுக்கெல்லாம் தமிழபிமானமும் அதிகமாகவே உண்டு. ‘அர்த்தத்தை நேராகக் காட்டவல்ல தமிழ்’ என்கிறார்கள். ‘சம்ஸ்கிருத சப்தம்போலே இருண்டுபொருள் தெரியாதபடி இருக்கையின்றிக்கே பெண்ணுக்கும் பேதைக்கும் அறியலாம்படி ஸ்வார்த்த பிரகாசமாயிருக்கும் தூய்மையுடைத்தான திராவிடபாஷை’ என்று விசேஷமான தமிழபிமானத்தையும் வெளியிடுகிறார்கள். எனினும், பெருந்தமிழர்களான ஆழ்வார்களின் ‘உருகிவழிந்து புறப்பட்ட சொல்லுக்குத் தமிழ் நடையில் அந்த ரஸானுபவ வியாக்கியானங்களைத் தழுவி உரை ஒன்றும் இல்லாததால், நீண்டகாலமாகத் தமிழர்களுக்குத் தமிழ்மறைப்பொருள் ஒரு மறைபொருளாகவே இருந்திருக்கிறது.

இந்த நிலையில் அந்தப் பேருரைகளைப் பெரும்பாலும் தழுவி ஒரு புதிய தமிழுரை தந்திருக்கிறார் பிரதிவாதி பயங்கரம் அண்ணா

ணங்காசாரியர், திவ்யப் பிரபந்த திவ்யார்த்த தீபிகை என்ற பெயரால். இப்புதிய உரையையும் திவ்யப்பிரபந்தத்தைப் பழைய வியாக்கியானங்களுடன் பருகி இன்புற்ற பரமரஸிகமணியின் 'உருகி வழிந்து புறப்பட்டசொல்' என்றே கூறலாம்.

இவரது உருகிப்பாயும் வாக்கினைச் சிறியேன் நேரில் அதிகமாக அனுபவித்ததில்லை. இவரது தமிழுரையைப் பெரும்பாலும் பயன் படுத்திக்கொண்டு திவ்யப் பிரபந்தங்களையும் பழைய வியாக்யானங் களையும் ஆராய்ந்துணர முயன்றிருக்கிறேன்.

வேதமொரு நான்கினையும் மிக்கதமிழ் நாலடியால்
ஓதிஉரைத் தேகருணை ஓங்குமகை

என்று வைணவரல்லாத தமிழரும் போற்றியுள்ள ஞான தேசிக ரின் கருணையுள்ளத்தை விசேஷமாய் கண்டுகொள்வதற்கும் இப் புதிய உரையாசிரியரின் உதவியைப் பயன்படுத்தியதுண்டு.

நம்மாழ்வார் 'திருவளர்சோலை' என்று ஒரு திருப்பதியை வருணித்திருக்கிறார். ஸ்ரீ அண்ணங்கராசாரியரின் அருமையான நூல்களையும் உபந்யாஸங்களையும் வியாக்கியான வெளியீடுகளையும் ஒரு 'திருவளர்சோலை' என்றே சொல்லிவிடலாம், 'வைஷ்ணவஸ்ரீ வளரும் சோலை' என்ற பொருளில். நம்மாழ்வாரைக் குறித்து வியாக்கியான சக்ரவர்த்தி, 'பராநர்த்தம் (பிறர் துன்பம்) நெஞ் சிலே படுகையாலே நாட்டுக்காகத் தாம் மன்றாடுகிறார்' என்று கூறியுள்ளார். தமது வெளியீடுகளாலும் சொற்பொழிவுகளாலும் ஆழ்வார் ஆசாரியர்களின் சித்தாந்தக் கோட்பாடுகளை இந்நாளில் நிலைநிறுத்த அரும்பாடுபட்டுத் தம் வாழ்க்கையையே அர்ப் பணித்துவரும் மகா வித்வான் அண்ணங்கராசாரியரும் 'நாட்டுக் காகத் தாம் மன்றாடுகிறவர்' தாம்.

பெருந் தமிழர்களான ஆழ்வார்களின் 'உருகி வழிந்து புறப் பட்ட சொல்'லைப் பாய்ச்சி ஸ்ரீ வைஷ்ணவப்பயிரைச் செழித் தோங்க வளர்த்தருளிய பூர்வாசாரியாளைப்போல் இப் பெரியாரும் காலத்திற்கு இசைந்த அரும்பெருந்தொண்டாற்றி வருகிறார்.

"உடல்மிசை உயிர் எனக்கரந்தெங்கும் பரந்துளன்"

அதாவது, 'உடலிலுள்ள உயிர்போல் பரமாத்மா உலகெல்லாம் பரந்து வியாபித்திருக்கிறது' என்ற ஆழ்வார் திருவாக்கைத் தங்கள் கொள்கைகளுக்கெல்லாம் அடிப்படையானதொரு சூத் திரம்போல் கொண்டிருக்கிறார்கள் பூர்வாசாரியர்கள். ஸ்ரீராமாநுஜ தர்சனம் என்ற ஸ்ரீவைஷ்ணவத்தின உயிரான இப்பொருளை வற் புறுத்தி, வேதாந்தம் என்றால் 'இருட்டறையில் இல்லாத கரும் பூனையைப் பிடிப்பதல்ல' என்பதைத் தெளிவாக்கிவருகிறார் ஸ்ரீ அண்ணங்கராசாரியரும் சென்றபல ஆண்டுகளாக. தெரியாத வேதாந்த பூமியைத் தெரியக்காட்டும் திருவிளக்காகக் காட்டி வருகிறார் ஸ்ரீவைஷ்ணவத்தை.

கடவுளாகிய உயிர் இயற்கையாகிய உடல் மூலமாக உயிர் களுக்கெல்லாம் நலஞ்செய்கிறது என்கிறது ஸ்ரீவைஷ்ணவம். புல னாகும் உடலைக்கொண்டு புலனாகாத உயிருண்மையை உணர்வது போல், உடலாகிய இயற்கையைக் கொண்டு உயிராகிய கடவுளுண் மையை உணரலாம் என்கிறது ஸ்ரீ வைஷ்ணவம். கடலில் உள்ள

மீன் கடல் இல்லை யென்று மறுப்பது போலத்தான் ஸர்வாந்தர் யாமியான ஸர்வேச்வரன் இல்லை யென்பதும். உயிருக்கு உடம்பு அடிமை செய்வதிலிருந்து, ஆத்மாவுக்கு இறைவனேடுள்ள இயற்கையுறவு 'தாஸன்' என்ற உறவு. இதனல் கைங்கரியமே புருஷார்த்தம் என்பது ஊகிக்கப்படும். 'நான், எனது' என்ற பற்றை விட்டு 'எல்லாம் அவன் அருள்' என்று நம்பி ஈச்வர சரணுகதிசெய்து கைங்கரிய வாழ்வு வாழ்வதே வாழ்வு. இத்தகைய சரணுகதிக்கு இலக்கான இறைவன் தாயாகவும் தந்தையாகவும் இருக்கிருன். தாய்க்கு மன்னிக்கும் சுபாவம் அதிக மானதால், அருள்வடிவமான லட்சுமியை முன்னிட்டு விஷ்ணு வைச் சரணமடையவேண்டும் என்கிறது ஸ்ரீவைஷ்ணவம். இது இருண்ட அறையில் மருண்டு திரிந்து கரும்பூனை பிடிக் கும் காரியம் இல்லை! எத்தனையோ தர்க்கவாதக் குழப்பங்கள் இருட்டடிப்புச் செய்திருக்கும் பிரதேசத்திலே ஓர் அருள் விளக் கைக் கண்டு காட்டுவதுதான். 'இந்த உலகின இருள் நீங்கவந் துதித்த' இதே அருள் விளக்கை இன்றைய தமிழுலகின்—இந்தி யாவின்—இருள் நீங்க எடுத்துக்காட்டுகிருர் ஸ்ரீ அண்ணங்கரா சாரியர்.

சற்றுப் பொறுங்கள்: அந்த இருட்டறைக் கரும்பூனைக் கதையையும் இப்போது உள்ளபடி உற்று நோக்கிவிடலாம். 'சிஷ்யா, போ அந்த அறைக்குள்ளே' என்று கட்டளையிட்டார் குருமூர்த்தி. உடனே புறப்பட்டான் சிஷ்யன். 'அந்த இருட் டறைக்குள்ளே போய் அந்தக் கரும்பூனையைப் பிடித்துவா' என்று தான் கட்டளை. 'அந்தக் கரும்பூனை அங்கே இல்லை!' என்றும் சொல்லிவிட்டார்!

'இது என்ன பைத்தியம்!' என்று திரும்பிவிடவில்லை சிஷ்யன். இருட்டறைக்குள்ளே தேடத்தொடங்கிவிட்டான், குருபக்தியுடன். இருட்டறைக்கு நடுவே கண்டுபிடிக்கவும்செய்தான்—கரும்பூனையை யல்ல, ஒரு கருந்திரையைத்தான்.

அந்தத் தடிப்பான திரையை சற்று விலக்கியதும் இருட் டறை இருட்டறையாகவே இல்லை. ஒரே வெளிச்சமாகிவிட்டது. ஏன், எப்படி? திரைக்கு அப்பாலுள்ள பகுதியில் ஒளிவீசிக் கொண்டிருந்தது ஒரு மங்கள தீபம். தடித்த கருந்திரைதான் அந்த ஒளி வெள்ளத்தை அறையெங்கும் பரவவிடாமல், இப்பா லுள்ள பகுதியை இருட்டாக்கி வைத்திருந்தது.

நம்முடைய உள்ளத்தின் ஒரு பகுதி இருண்டுகிடந்த போதி லும், வேறொரு பகுதியில் தீபமங்களஜோதி பிரகாசித்துக்கொண் டிருக்கிறது என்பதை உணர்ந்துகொண்டான் சிஷ்யன், குருவின் அருளாலும், தன்னுடைய பக்தி விசுவாசத்தாலும். அஞ்ஞானத் திரை விலகியதும், ஆண்டவனுடைய அருளொளி வழி காட்டும் என்பதைத் தெரிந்துகொண்டான்.

"நன்னெஞ்சே! நம்பெருமான்
நமக்கருள் தான் செய்வானே!"

என்று நன்னெஞ்சர் கண்ட நன்மையை, மகத்தான உண்மையைக் கண்டுகொண்டான்.

ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி இன்று 'இல்லாத பொல்லாத கரும்பூனை' காட்டிப் பயமுறுத்தவில்லை. பரம ஸாத்விக தர்ம மூர்த்திகளான ஆழ்வார் ஆசாரியர்கள் கருணைகூர்ந்து நமக்காக ஏற்றிவைத்திருக்கும் ஞானவிளக்கை 'அதோ திரையைத் தூக்கிப் பார்த்துக்கொள்ளுங்கள்' என்பதாகத் தானே சொல்லிக் காட்டுகிறார். இவர் காட்டவே, 'ஆஹா, இன்றும் என்றும் வாடா மணிவிளக்கு இது!' என்று நாமும் கண்டுகொள்கிறோம்.

நவநாகரிகம் நம்மைக் கடவுளிடமிருந்து பிரித்து விலக்கி வைக்க முயல்கிறது. சித் அசித் ரூபமான ஜீவ ஜட உலகம் அவன் திரு மேனியாய் அவனைவிட்டுப் பிரியாமலிருக்க, அத்தகைய அழகனை, அன்பனை, மெய்யனை நாம் பிரிந்திருக்கமுடியும் என்கிறது ஜடமாயாவாதம்! இதனால் இந்த நாகரிக வாழ்க்கை பசையற்று இசையற்று நல்லின்பமற்று நரக வாழ்க்கையாகிறது.

இந்த வறண்ட வாழ்விலே, வணங்கக் கொடுத்த கையைக் கொண்டு பிணங்கிப் போரிடுகிறோம். மகாவிசுவாசம் கோயில் கொள்ளவேண்டிய இதயத்திலே அவநம்பிக்கையைக் குடியேற்றுகிறோம். அணுக்குண்டு--வேதாந்தம் பேசுகிறோம், தீதிலாமொழிகளைப் பேசவேண்டிய வாய் திறந்து. நவநாகரிக மின்சார வெளிச்சம் ஞானக்கண்ணை மழுக்க, ஞானத்தை அறிவிலே இழந்து, அறிவைப் பகைத்தியில், புகைத்துக்கொண்டிருக்கிறோம். வாழக் கிடைத்த பசுஞ்சோலையைப் பாழும் பாலையாக்கி, ஜ்வர வேகத்திலே அங்குமிங்கும் ஓடித் தவிக்கிறோம்.

இத்தகைய பரிதாப நிலையில் பொதுவாக இந்துக்களும், சிறப்பாகத் தென்னாரியரும் குன்றின்மேலுள்ள ஞானப்பூங் கோயிலாக—கோயிலின் வாடாமணிவிளக்காக விளங்கும் உண்மையைநோக்கி உய்யவழிகாண்பதற்கு, இக்காலத்திற்கு இசைந்த ஓர் அருமையான கைவிளக்கு ஸ்ரீ அண்ணங்கராசாரிய ஸ்வாமியின் ஸ்ரீவைஷ்ணவத் தொண்டு.

●

'வானம்—கைவிளக்கு எடுத்ததென்ன வந்தது கடவுள் திங்கள்' என்பர் கவிச் சக்ரவர்த்தி, ராமபிரான் சீதா பிராட்டியுடனும் தம்பியுடனும் இரவில் காட்டிலே போகும்போது தோன்றிய சந்திரிகையை வருணிக்கும்போது.

வானம் எடுத்த நட்சத்திர விளக்குகளைச் சிந்தனைக்கோமான் கார்லைல்,தெய்வத்தின் விண்ணகரிலே தெருவிளக்குகள்' என்பர்.

இத்தகைய ஒரு திருவிளக்கு இன்று நமக்கெல்லாம் அண்ணா ஸ்ரீஸ்வாமியின் அருமைப் பிரசுரங்களும் பேருரைகளும்.

அன்று காஞ்சியில் தோன்றிய பொய்கையார் 'மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி ஒன்றத் திரித்து' எரித்தார் திருவிளக்கு, ஸ்ரீராமானுஜர் முதலானவர்களுக்கும் ஒளிகாட்டி வழிகாட்டும்படி.

இன்று பழைய காஞ்சி மாநகரம் புதிய சென்னை மாநகரத்திற்கு ஒரு திருவிளக்கை உதவியிருக்கிறது, வடக்கும் தெற்குமாக ஒளிவீசி நெறிகாட்டும்படி. எந்தப் பொய்யிருளுக்கும் அஞ்சாத விளக்கு, எந்த மின்சாரப் பகட்டு வெளிச்சத்திலும் மழுங்காத, மயங்காத, விளக்கு!

ஸ்ரீ யோகி சுத்தானந்த பாரதியார் படிப்பினைகள்

ரஸமான கடிதங்கள்

பெண்சக்தி

அன்பனே!

வாழ்வின் ஆதாரம் பெண்; ஆதேயம் ஆண். இரண்டும் சேர்ந்தாலே உலகம் நடக்கும். ஆண்பெண் சேர்க்கை பெரிய சிருஷ்டிரகசியம். அதனாலேதான் அதற்கு அவ்வளவு கவர்ச்சியுள்ளது. ஆண்பெண் உறவு அத்யாத்ம-யோக உறவாகுமட்டும், சிற்றின்பத் தினவு ஆளை அரித்துத் தின்னும். சிற்றின்ப இச்சை பேரின்ப வேட்கையாலேதான் அடங்கும்.

காமத்தை பகவத்காமம் ஆக்கினாலொழிய ஒருவன் அதனின்று விடுதலை பெறமுடியாது. காமம் என்பது மனதின் தினவு. காதல்என்பதுஉள்ளன்பின்தீவிரம். காமத்தை அடக்கவேண்டும். கண்ணும் காதும் நல்லதைக்கண்டு நல்லதைக்கேட்டுப்பழகவேண்டும். அழகைக்கண்டு ஆசைப்பட்டு மயங்குவதைவிட, அழகில் கடவுளின் பொலிவைக் காணல் எண்ணத்தை உயர்த்தும். மலரின் அழகையோ புள்ளின் அழகையோ கண்டால் எப்படியோ அப்படியே மாதர் அழகையும் கலைச்சுவையுடன் காண்க. அந்த அழகைக் காமவெறியால் கசக்கிப் பிழியாமல் கடவுளன்புடன் வணங்கப் பழகுக.

பெண்ணை ஓம்சக்தி என்று வணங்குக. ஆணைப்பெண் ஓம் சுத்தபரமாத்மா என்று வணங்குக. காமத்தினவு வரும்போது தனியே செல். உட்காராதே, படுக்காதே, உடம்பைத்தடவாதே, காற்றாடத் திறந்த வெளியில் தனிமையாக ஓம்சுத்தசக்தி ஓம்சுத்த சக்தி என்று ஒவ்வொரு மூச்சுடன் சொல்லிக்கொண்டே விறுவிறென்று இங்குமங்கும் உலாத்திக்கொண்டிரு. பத்து நிமிஷத்தில் பயன் தெரியும். இப்படியே பழகினால் பெண்விகாரம் ஓடிமறையும். பெண்ணில் பராசக்தியைக் காண்பாய். பிறகு பெண்மாயம் என்னைக்கெடுத்தது என்றெல்லாம் பழைய பாட்டையாக்கள் பாடியபடி நீயும் பாடமாட்டாய்.

இருபத்துநான்கு வயதுவரையில் பிரமசரியக் கல்வி கற்று பிறகு பிரமசரியம் காத்த கன்னிகையை காதல்மணம் புரிந்து இல்லறத்தில் வாழ்வதே இனிது. இல்லறமே இயல் அறம். இல்லறமில்லாமல் காமத்தினவுகொண்டு இருட்டுச்சேட்டையும் களவொழுக்கமும் செய்தல் வாழ்வை நரகமாக்கும். பரிசுத்தமான யோக வழியே அடிவைத்தவர்கள், காமத்தைக் கனவிலும் நினைக்கக் கூடாது. பெண்களைப் பராசக்தியாகக் கருதி வணங்கவேண்டும். சிற்றின்பத்தினவைப் பேரின்பமாக மாற்றச் சாதனம்செய்யவேண்டும். அதைப்பற்றி உனக்கு இன்னொருதடவை எழுதுவேன்.

வைராக்யம் வளர்க!

காம ஜெயம்

யோகிகளின் முக்கால்வாசி வேலை மனதை அடக்குவதே. மனவடக்கத்தில் பெரும்பகுதி காமத்தை வெல்வதிலேயே செலவாகிறது. சிலர் தலைகீழேநின்று ஹடயோகம் பழகினாலும், மூச்சைப்பிடித்து முகம்சிவக்கப்பிராணயாமம் செய்தாலும் சரி, காமத்தைமுழுதும் அடக்க முடிவதில்லை. விழிப்பில் அடங்கியிருந்து

கனவில் தீவிரப்படும்; தனிமையில் அடங்கியிருந்து விஷயத்தைப் பார்த்ததும் கிளம்பும். சிலசமயம் புயலாகச் சீறிவந்து ஆளை அடித்துக்கொண்டேபோய்விடும். காமத்திற்கு அணுக்கூட இடந் தரக் கூடாது.

காமஸங்கற்பத்தை அடியுடன் ஒழிக்கவேண்டும். அதற்கு மனம் உயர்ந்த பேரின்ப எண்ணங்களிலும் தெய்வ உணர்ச்சியிலும் சஞ்சரிக்கவிடவேண்டும். பன்றியுடன் சேர்ந்த கன்றும் மலமுண்ணத்தொடங்கும். காமிகளுடன் சேர்ந்தவன் அவ்வாறே சிற்றின்பச் சாக்கடையில் ஜலக்கிரீடையாடத் தொடங்குவான். சாதகன் சாதுசங்கமே வகிக்கவேண்டும். பக்தர்கள் சங்கத்தில் சேர்ந்து பகவானை எப்போதும் பாடி, பகவத்கதைகள் கேட்டு, பகவந்நாமஸ்மரணமே செய்துவந்தால் தீய எண்ணங்களுக்கே இடம் இராது.

தீயில் பழுத்தஇரும்பு தீநிறமாகிறது. தெய்வபக்தியில் பழுத்த உள்ளமும்தெய்வத்தன்மைபெறுகிறது. தீயுண்ட இரும்பை வேண்டிய உருவாகத்தட்டலாம், இணங்கும். பக்திபரவசத்தால் பக்குவமான மனதை எளிதாக நாம் கருதிய நல்ல சாதனவழியே திருப்பலாம். மனம் இயல்பில் கெட்டதன்று. அதைச் சமநிலையில் வைத்துக்கொண்டிருந்தால் அமைதிநிலவும். சமநிலைதவறி ஆசையாணவப் புயல் மோதவிட்டால் வாழ்க்கையும் கண்டதுண்ட பாறைகளில் மோதி உடையும்.

காமஜயத்திற்கு முதற்படி மனச்சமதைதான். மனச்சமதைக்கு உடலுறுதியும் ஆரோக்கியமும் அவசியமாகும். நோயுடல் நிம்மதி பெறுது. நோயாளி சாதனத்தில் சித்திபெறமுடியாது. ஏனெனில், அவன் மனம் எப்போதும் நோயால் கவலையுற்றிருக்கும்; ஏகாக்கிரம் ஏற்படாது. உடல் நலத்திற்கு இயற்கையான மிதாகாரம், தூய சுற்றம், நல்லகாற்று, நன்னீர், நல்ல உறக்கம், நல்ல வாசனை, நல்லவர் சேர்க்கை அல்லது தனிமை, ஒருமணி நேரமாவது நல்ல உடற்பயிற்சி—இவை வேண்டும்.

உடலைப் பாதுகாப்பதும் ஒரு கலையே. நோய்வராமல், நமது தொழிலுக்குத் தக்கபடியே பலமுள்ள லாகவமான உடம்பு வேண்டும். அதிகக் கொழுப்பேறுமல், ராஜஸச் சூடேறுமல் உடம்பைப் பாதுகாத்தால் மனவிகாரம் உண்டாகாது. உடலுக்கு அடுத்தபடி இந்திரியசுத்தம்; மெய், வாய், கண், மூக்கு, செவி இவை அறிபொறிகள்; இவை தீயவழியில் தாவாமல் நல்ல காரியங்களிலேயே செல்லும்படி தேர்ப்பாகன் பஞ்சகல்யாணிக்குதிரையை நடத்துவதுபோலவே நடத்திவந்தால் தீங்கேயிராது.

அடுத்தது கர்மேந்திரியப் பாதுகாப்பு. இவை செயலுறுப்புக்கள். கை, கால், நாக்கு, எருவாய், கருவாய், இவை பரிசுத்தமாகவும் இயற்கையாக ஏற்பட்ட தொழிலையே செய்து வேறு வக்ர விபரீதங்கள் இல்லாமலும் பாதுகாத்தால், தீங்கில்லை. இந்த தசேந்திரியப் பாதுகாப்பினுல் மனப்பேயை அடக்க வழியுண்டாகும்.

ஒரு பெண்ணைக் கண் பார்க்கும்போது, அது நம்மைப்போல் சுத்தான்மா, நடமாடு கோயில், புடவை ரவிக்கை நகை நட்டுகளெல்லாம் அதன்மேல் சுமத்தப்பட்ட சுமை. உருவிகாரங்கூட எலும்பும் தோலும் சதையும் நரம்பும் இரத்தமும் கொண்டு

நம்மைப்போலத்தான் சோற்ருல் செய்யப்பட்டது. ஆதலால், அதைக்கண்டு நாமேன் மயங்கவேண்டும்? அதில் அழகன்பாக விளங்கும் சுத்தபரமாத்மனை வணங்குவோம் என்ற புனித எண்ணம் உதித்தால் காமவெறிக்கே இடமிராது. மனிதன் நாக்கையும் குறியையும் காத்தால் காமவேதனையே இராது.

சில துறவிகள் பெண்ணைப் பேய் பிசாசு என்று பழித்து பயப்பட்டு ஓடுகிருர்கள். அவர்கள் ஒருக்காலும் காமஜயம் பெற முடியாது. பெண்ணைப் பராசக்தி என்று வணங்கும் சமநிலையுணர்ச்சிவந்தாலே காமத்தை வெல்லலாம். விஷயவஸ்துக்களை விஷயவாஸனையுடன் கண்டால் விஷய போகத்திற்கு மனது அரிக்கிறது. மன அரிப்பினுல் சித்தம் கலங்குகிறது. சித்தக் கலக்கத்தால் புத்தி மயங்குகிறது. புத்தி மயக்கத்தால் சொரூபந் தெரியாமல் மாயாவிகாரத்தில் மதிபாய்கிறது. மதிபிசகினுல் செயல் பிசகி, ஆள் சாக்கடைக்குழியில் விழுந்து அதையே பரம சுகம் என்று நினைத்துக் கெட்டழிகிருன்.

கெடுதல் பெண்ணிடமும் இல்லை, ஆணிடமும் இல்லை; இரண்டும் சுத்தசைதன்யத்தில் இரண்டு உருக்களே. கெடுதல் அடங்காத புலன்களிலும், துறுதுறுத்து அலையும் மனசிலுமே உள்ளது. சாத்விக ஆகாரம், தூயவாழ்வு, தூய நினைவு, தூய சூழல், தூய கல்வி, தூய பேச்சு, தூயமௌனம், தூய தொண்டு இவற்றிலேயே மனம் சென்ருல் காமம் குரோதம் மோகம் முதலிய எல்லாக் குற்றங்களையும் வெல்லலாம்.

அன்பனே, மரபுவளர்ச்சிக்கே இந்திரியம் ஏற்பட்டது. அதை வேறெந்தச் சேட்டையாலும் வீணுக்கினுல் ஆயுள் குறையும். நோய் வரும். விந்தைக் காத்தலே வாழ்வு; விந்தை இழத்தலே சாவு. பிரமசரியமே சக்தி.

சுத்தான்ம சித்தி

அன்பனே!

சுத்தான்ம சித்தி—இதுதான் மனித வாழ்வில் ஒரே லட்சியம். மற்ற எதை அடைந்தாலும் பயனில்லை. தன்னை அறிந்தடைவதே அடைவு. சூரியமண்டலத்திற்குக் காந்தவிளக்கெதற்கு? சுத்தான்மசித்திபெற்ற பரமயோகிகளுக்கு மதநூல்கள் தேவையில்லை. அச்சுப் புத்தகங்களால் அவர்கள் அறிவைப் பெறவில்லை. தன்னை யறியாமல் எதை யறிந்தாலும் அறிவாகாது.

அறிவிற்கு அழகு அனுட்டானம். சாதனமில்லாத படிப்பு சாரீரமில்லாத சங்கீதப்பயிற்சிபோலும். கழுதைத் தொண்டையால்கர்னுடக தேவகாந்தாரி பாடமுடியாது. ஊமைக்குயில் வசந்த கீதம்பாடமுடியாது. நூல்களைப்படித்து உருத்தள்ளிவிடலாம். அனுட்டானமில்லாவிட்டால் பயனில்லை. யாழிருந்தென்ன குழலிருந்தென்ன; தக்க நிபுணன் மீட்டும்போதே யாழும் குழலும் இசையின்பமளிக்கும். தன் அந்தரங்கத்தில் உள்ள ஆத்ம சுகத்தை சாதனத்தால் அனுபவிக்கத்தெரியாதவன் பேசியென்ன எழுதியென்ன, படித்தென்ன உலகைப் பார்த்தென்ன பயன்? படி; படித்தபடி நட—அப்போதே படித்தறிந்தவனுவாய்.

அறியவேண்டியதைக் கல்விகேள்விகளால் அறிந்து மனனம் செய்து அதே தியானமாகி, உள்ளுணர்வு பெறவேண்டும். அன்பு

யாழின் இசை

2. ஊர்மிளாதேவி

(வசுமதி ராமஸ்வாமி)

ராமாயணத்தை வால்மீகி எழுதினர். கம்பர் எழுதினர். துளஸிதாஸ் எழுதினர். ஆனல், ஒருவரும் ஊர்மிளா தேவியைப் பற்றி போதுமான அளவு எழுதவில்லை. உலகத்தில் ஒரு பெண்ணும் ஒரு ஆணும் எப்படி இருக்கவேணுமென்று உதாரணம் சொல்லவேணுமானல் காந்திஜி ராமரையும், சீதையையும்தான் சொல்வது வழக்கம். ஊர்மிளாவை யாரும் நினைக்கவில்லை.

ஆனல், மைதிலிசரண் குப்த என்ற ஹிந்தி ஆசிரியர் ராமாயணத்தை வேறுவிதமாக எழுதியிருக்கிறர். அவர் கதையில் ஊர்மிளாதேவியும் லக்ஷ்மணரும்தான் கதாநாயகன் கதாநாயகி. ராமாயணத்தில் இவர்களைப்பற்றி எங்கேயோ ஒன்றிரண்டு வாக்யங்கள்தான் எழுதப்பட்டிருக்கும். ஞானிகள் தங்களை பிரகடனம் செய்துகொள்ளமாட்டார்கள்.

ராமாயணம் பூராவும் கர்மத்தை கைவிடாமல் செய்தது லக்ஷ்மணர்தான். அவருடைய சிந்தையிலும், செயலிலும் ராமர் சீதை இருவரின் சேவையில்தான் மூழ்கி இருக்கும். லக்ஷ்மணர் பதினான்கு வருஷங்கள் காட்டில் ஊண் உறக்கமின்றித் தொண்டு புரிந்த பெருமை யாருடையது?

ஊர்மிளாதேவி காட்டிற்குப் போகக்கூடாதெனத் வழிமறைத்தால் லக்ஷ்மணர் மனம் சஞ்சலமடைந்திருக்காதா? அப்படியே அவர் மீறிப்போனலும் வனத்திற்கு தினம் ஒரு கடிதம் செய்தி சொல்லி உடனேவரும்படி தொந்தரவுசெய்திருந்தால், லக்ஷ்மணர் தன் சக்திபூர்வமாக ராமருக்குப் பணி ஆற்றி யிருப்பாரா? அல்லது ஊர்மிளா மயக்கம்வந்து விழுந்துவிட்டிருந்தால் லக்ஷ்மணரால் கிளம்பமுடியுமா?

ஆனல், அந்த உத்தமி என்ன செய்தாள்? லக்ஷ்மணர் கிளம்புவதைத் தடுக்கவில்லை. அத்துடன் கணவனின் பிரிவாற்ருமையில் வருந்தும்போதுகூட அவள் சிந்தனை சிகரம் அளவிட

நீர் வார்த்து, அந்தஉணர்வை வளர்த்தால் அருள் மலரும்; அருளால் மெய்யறிவும், அதனல் மெய்யின்பமும் வளரும்; ஆணவம் அழிந்து எல்லாம் இறைவன் என்ற அறிவு மலர்தலே கற்றதன் பயனகும். அந்த அறிவின் வழியே தியானசாதனம் செய்தலே உண்மையான வழிபாடாகும். இருள் வழி நீத்து அருள் வழி நோக்கலே வழிபாடாம்.

இறைவன் திருவருளே எல்லாம் நடத்துகிறது என்ற அருளுடைமை யுணர்ச்சி வரவேண்டும். அகந்தை மடமை; இறைவனுக்கு அடைக்கலம் ஆதலே பெருமை. உள்ளத்தில் உண்மை, வாயில் வாய்மை, உடலில் மெய்ம்மை யணிந்து, பாச அன்பை விட்டுப் பதியன்பு செய்தாலே, சுத்தான்ம உணர்வு தோன்றும். சுடரைக்கொண்டே விளக்கிற்கு மதிப்பு. அழகான விளக்கானலும் மின்சார சக்தியிறங்கிப்பளிச்சிட்டாலே மதிப்பு. சுத்தான்ம உணர்வினலேயே மனிதனுக்கு மதிப்பு. அதுதான் இன்ப ஊற்று. அன்பா! அந்த ஊற்றை அள்ளிப்பருகு; தாயின்பனயிரு. (14-5-47)

ஓம் சுத்த சக்தி !

முடியாமல் போகிறது. தெய்வமே என் நினைவு அவருக்கு இல்லாமல் செய். என்னைப்பற்றி நினைத்துவிட்டால் அவர் கர்மத்தில் பிழை வந்துவிடுமென்று பிரார்த்திக்கிருள்.

புராணத்தில் ஊர்மிளாவின் தியாகத்தைப்பற்றி இன்னும் விசேஷமாகச்சொல்லுகிருர்கள். அதை மைதிலி சரண் குப்தகூட அழகாகச் சொல்லுகிருர்.

மைதிலிசரண் குப்த லக்ஷ்மணருடையபிரிவில் ஊர்மிளாவின் வாக்கியமாகச் சொல்லுகிருர் :

''ஸகே ஜாஓ தும் ஹஸ்கர் பூல்
ரஹூ மை ஸீத் கர்கே ரோதி''
''தும் ஹாரா ஹஸ்னே மே ஹை பூல்
ஹமாரே ரோனே மே மோத்தீ''

"சிரிப்புடன் காட்டுக்குப்போங்கள்; நான் அழுதுகொண்டு நினைக்கிறேன். உங்களுடைய சிரிப்பில் ஆனந்தம் எங்களுடைய அழுகையில் கண்ணீர் முத்துகள்."

''ஸபல் ஹீ ஸஹன் தும்ஹாரா த்யாக்
ந ஹீ க்ஷிபல் மேரா அனுராக்,
ஸித்தி ஹ: ஸ்வயம் ஸாதனாபாக்
ஸீதா க்யா, க்ஷுதா ந ஜா ஹோதி''
''தும்ஹாரே ஹஸ்கே மே ஹை பூல்
ஹமாரே ரோனே மே மோத்தீ''

"என்னுடைய கண்ணீர் முத்துகளை மறந்துவிடுங்கள். இல்லாவிட்டால் உங்கள் தியாகத்திலும், உண்மையான கடமையிலும் சித்தி அடைய முடியாமல் போய்விடும்" என்கிருள்.

எந்த இளம்பெண் இவ்வளவு தீர்க்க தரிசனமாகச் சிந்தித்து தன்னைக்கூட மறந்து கடமையில் ஈடுபடும்படிச் சொல்லமுடியும்?

ஊர்மிளா லக்ஷ்மணரின் தூக்கத்தையும் தான பிரார்த்தித்து வாங்கிக்கொண்டாராம்! அவர்தூக்கத்தில் அண்ணு, மன்னி பணிவிடை செய்யாமல் விட்டுவிடுவாரோ என்கிற பயம்.

வனத்தில் குளிரும், பனியும் தாங்கமுடியாமல் இருக்கிறது. லக்ஷ்மணர், அண்ணுவும், மன்னியும் நித்திரை செய்த பிறகு அங்குள்ள சருகுகளையும், இலைகளையும்நிரப்பி அவர்களை குளிர் பாதிக்காமல்போர்த்துவிடுகிருர். அவருக்கு தூக்கம் அண்டவில்லை. அதிகாலையில் ராமர் எழுந்திருக்கும்போது லக்ஷ்மணர் உடம்பெல்லாம் ஜலம் சொட்ட நிற்கிருர். இதைக் காண சகியாமல் லக்ஷ்மணரை தழுவிக்கொள்கிருர். இம்மாதிரி அரும்பணிகள் அநேகம் அந்த பதினுலு வருஷத்தில் செய்ய மூல காரணம் யார்?

சீதை காட்டிற்குப் போனது பிரமாத தியாகமல்ல. பெண்கள் கணவனுடன் வாழும்பொழுது அது காடானுல் என்ன? நாடானுல் என்ன? ராமர் இருக்குமிடம் அயோத்திதானே? ஆயிரம் சீதைகள் சேர்ந்தால்கூட ஒரு ஊர்மிளாவுக்கு ஈடானமாகாது!

லக்ஷ்மணர் பதினுன்கு வருஷங்கள்தான் காட்டிற்கு போய் வந்தாரே! வந்த பிறகாவது ஊர்மிளாவுடன், பேச சந்தர்ப்பம் உண்டா? வந்ததும் ராமருக்கு ராஜ்யாபிஷேகம். அண்ணுவுக்கு பணிவிடைசெய்து அவருக்கு வேருஎதிலும் மனம்செல்ல மறந்துவிட்டது.

அப்படியாவது தன் மனைவியிடம் லக்ஷமணருக்கு அன்பு இல்லை; அதனால் ராமருடைய பணியில் மனம் ஈடுபட்டதென்று சொல்லமுடியுமா? அப்படி இருந்தால் அது பெரியகாரியமல்லவே.

திரும்பி அவர்கள் அயோத்திக்கு வந்ததும் ஊர்மிளா மனதில் தாபம் ஏற்படுகிறது. லக்ஷமணர் அண்ணாவின் ராஜ்யாபிஷேக வேலையில் ஈடுபட்டிருக்கிறார். ஊர்மிளா அவரை சந்திக்கப் போகும்பொழுது கணவனின் மனதை அவள் மனம் எடைபோடுகிறது. அவர் பதினான்குவருஷங்கள் தன்னைக்கூட மறந்து அண்ணாவுக்கு சேவை புரிந்தாரே யென மனம் பெருமை அடைகிறது. ஆனால், நாட்டிற்கு வந்தபிறகு தன்னை சந்திக்கவில்லையே; ஒருகால் நம்மிடம் அன்பு இல்லாமையால் இவ்வளவு வருஷங்கள் காட்டில் இருக்கமுடிந்ததுபோலுமென ஒரு நிமிஷம் மனதில் எண்ணம் மின்னுகிறது. லக்ஷமணரைச் சந்திக்க வேகமாகப் போகிறாள். வழியில் ஒரு பச்சைக்கிளி பேசுகிறது. அதனிடம் போய் பேச்சைக் கேட்கிறாள். அந்தக் கிளி "மிதிலாபுரியிலிருந்து இன்னொரு கிளி விளையாட வந்திருக்கிறது" என்று சொல்லுகிறது. இதை ஊர்மிளா நின்று கேட்கிறாள். உடனே அவளுக்கு இது லக்ஷமணர் சொல்லிக்கொடுத்த வார்த்தைதான் என்று புரிந்துவிடுகிறது. திரும்பினதும் லக்ஷமணர் புன் சிரிப்புடன் நிற்கிறார்.

கிளிக் கூட்டிடம் ஊர்மிளா நெருங்கி முகத்தை முன்னுக்கு நீட்டுகிறாள். கிளி அவள் மூக்கு புல்லாக்கை கொத்த வருகிறது.

பொய் கோபத்துடன் லக்ஷமணரைப்பார்த்து "உங்கள் அதிசயக்கிளிக்கு இதுகூட நீங்கள் சொல்லிக்கொடுத்தது தானா?" என்கிறாள்.

"இல்லை, ஊர்மிளா! உன் செவ்விதழின் காந்தியில் புல்லாக்கின் முத்து பளப்பளப்பாய் மாதுளைமுத்துபோல் ஒளி வீசுகிறது. அதனால் கிளி மாதுளம்முத்தென்று கொத்தவருகிறது" என்கிறார். நாணத்தால் சிவந்தமுகத்துடன் ஊர்மிளா தலைகுனிகிறாள்.

லக்ஷமணர் தன்னிடம் அன்பு கொள்ளவில்லை; அதனால் காட்டில் பதினான்கு வருஷங்கள் சுலபமாய்த் தள்ளிவிட்டாரெனத் தோன்றிய சந்தேகம் விலகிவிட்டது. ஆனால், ராமாயணத்தின் ஜீவநாடியான ஊர்மிளா தன்னால் தான் லக்ஷமணர் இப்படி கர்மவீரராகத்திகழ்கிறாரென்று அறியவில்லை. ஆம்! சிறப்புற்றவர்கள் யார்? தான் என்பதை மறந்தவர்களல்லவா?

ராமாயணமென்ற மஹாமாலையில் ஊர்மிளாதேவி சுடர்விட்டுப் பிரகாசிக்கும் ஒரு ரத்தினம்.

யோகி சுத்தானந்த பாரதியார்

இயற்றிய

காந்தி கீர்த்தனம்

350 பக்கங்கள். ரூ. 3—8—0.

உயரிய கிளேஸ் புதிப்பு.

இதைப் படித்தால் வாழ்க்கை புனிதமுறும்; சக்திபெறும்.
டி பதிப்பின் லாபம் மகாத்மாஜி சேவா சங்க
இலவசச் சம்பள நிதிக்கே!

9

உலகத்தின் அளப்பரிய விசித்திரங்களில் எதை நோக்கினாலும் எம்பெருமானின் லீலையே தாண்டவமாடுகிறது என்கிறார்கள் பக்தர்கள். வெறும் புரட்டல், பொய், பூதஞ்சி, வேஷம், மோசம், சாகஸம் என்று அடிக்கிறார்கள் நம்பிக்கையற்ற நாஸ்திகர்கள். எந்த யுகத்திலும் இந்த விசித்திரங்களும் மாறுபட்ட மனோபாவமும் இல்லாமலில்லை. எதற்கும் எதிர்ப்பும் போட்டியும் இருந்தால்தான் நன்றாகப் பரிமளித்து ச்ரத்தையுடன் வ்ருத்திக்கு வரமுடியும். இது ப்ரத்யட்சி அனுபவம். அதிலும் எனக்கு சர்வ சகஜம். இவைகள் என் வீட்டிலேயே நான் தினம்காணும் அதிசயங்களானதால் அதில் வியப்பே இல்லை. "இதெல்லாம் என்ன கண்கட்டுவித்தை சார்! சிறு குழந்தையாவது, பூர்வஞானம் பெற்றுச் சொல்வதாவது" என்று காரஸாரமான குரலில் அழுத்தமாக ஒருவர் கூறியவாறு கூட்டத்தில் இடித்துக்கொண்டு செல்கிறார். அவருடைய மனைவி இங்கு வந்திருப்பதையறிந்து அந்தம்மாளைத் தேடிக்கொண்டு ஆத்திரத்துடன்வரும் அவசரமே இத்தனை கோபத்திற்குக் காரணம்.

அவருடைய தர்மபத்னி, அவர் காலையில் ஆபீஸுக்குப் போனவுடனே, இங்கு வந்துவிட்டாள். கணவன் ஆபீஸிலிருந்து வருவதற்குள் தான் போய்விடவேண்டுமென்றுதான் வந்தாள். ஆனால், இங்குள்ள ஆச்சரியத்தைக் கண்டும் கேட்டும் வியப்புற்று நின்றதில் நேரம்போவதே தெரியாமல் போய்விட்டதால் அவசர அவசரமாய்க் கூட்டத்தைத் தள்ளிக் கொண்டுவரும்போது கணவன் அந்தக் கும்பலில் நீஞ்சுவதைக் கண்டு நடுங்கினாள். எனினும், தைரியத்தைக் கைவிடாமல் அவனைப் பார்த்து "இதோ வருகிறேன். இருங்கள்! என்ன ஆச்சரியம்போங்கள்! சென்ற ஜன்மத்தில்கூட நாமே தம்பதிகளாயிருந்தோமாம். அப்போது நீங்கள் உங்கள் மக்கள் மனிதர்களின் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு என்னை அடித்து வதைத்து இம்ஸித்து என்னைத் தாய்வீட்டிற்கு அனுப்பிவிட்டீர்களாம். நான் அழுது அழுது அதே ஏக்கத்தில் இறந்துவிட்டேனாம்......

கணவன்:—(இடைமறித்து)......என்ன !......நீ இறந்துவிட்டாயா! கொட்டாப் புளிபோல் நிற்கிறாயே?...

மனை:—நன்றாயிருக்கிறது குறுக்கே பாய்வது! போன ஜன்மத்தில் நடந்ததையல்லவா சொல்கிறேன். இறந்தபிறகு நீங்கள் செய்த குற்றத்தை எண்ணிஎண்ணி ஏங்கித்துடித்து மறுமணம் செய்துகொள்ளாமல் த்யாகியாகி பஜனை மடத்தில் சேர்ந்துவிட்டீர்களாம். அதன் பலனாக பகவான் என்னையே

இந்த ஜன்மத்தில் உங்களுக்குக் கொடுத்து அந்தக் குறையைத் தீர்த்துவைத்தாராம்....

என்றதைக் கேட்டு."ஐயோ! க்ரகசாரமே! இந்த மூடாத்மாவை அடைய நான் தபஸ்செய்தேனு?...சரி! அடுத்த ஜன்மத்திலேயும் நீயே வந்து என் ப்ராணனை வாங்கலாம்; வா வீட்டிற்கு. இதோ பாரு, போனல்போகிறதென்று இங்கு பலபேர் மத்தியில் உன்னை ஒன்றும் செய்யவில்லை. இனி, இம்மாதிரி கட்டுக்கதை ஜாலவித்தைக்கூட்டத்திற்கு வந்தையோ! போன ஜன்மத்தில் நடந்தபடி இந்த ஜன்மத்திலும் செய்துவிடுவேன். பத்திரம்!' என்று அதட்டினர்.

இதையும் பாக்யம் கேட்காமலில்லை."ஒரே விஷயத்தைச் சிலர் போற்றுகிறார்கள். சிலர் தூற்றுகிறார்கள். சிலர் பரிகஸித்து ஏளனப்படுத்துகிறார்கள். இதுதான் உலகவிந்தை போலும். யார் எதைச்சொன்னலும் சொல்லட்டும்; எனக்கு முன்ஜன்மத்தைப்பற்றிக் கவலை இல்லை. இந்த ஜன்மத்தில் என் கண்மணிக்கு ஒரு குறையும் இன்றி சந்தோஷமாய் ஆனந்தவாழ்க்கை வாழ்வானு? சிறந்த மனைவி வருவாளா? எப்போது கல்யாணமாகும்? எத்தனை குழந்தைகள் பிறக்கும்? நான் இப்போதுள்ள நிலைமையில் ஸௌமாங்கல்யத்துடன் இவ்வுலகைவிட்டுப் போகும்படி பாக்யம் கிடைக்குமா? என் கணவரின் வாய் திருந்தி பழயபடியாவதற்கு ஏதாவது வழி உண்டா? என்கிறவைகளைக் கேட்டறிந்தால் போதும்"என்று தனக்குள் பெரிய மனக்கோட்டை கட்டியவாறு நீந்தியடித்துப் பின்னும் சற்று தூரம் சென்றாள். பொழுதோ ஏறுகிறது. ஆபீஸிலிருந்து மகன் வந்துவிட்டானே என்னவோ? என்ன நடந்ததோ? என்ற கவலையுடன் போகிருள்.

இவளுக்கு 10 கஜ தூரத்தில் கையில் தட்டுடன் தாம்பூல சகிதம் இன்னும் சில ஷோக் நங்கைகள், மைனர் பேர்வழிகள் புடைசூழ வேதகிரி முன்னல் நீந்தியடித்தவாறு போவதைக் கண்ட பாக்யலக்ஷ்மி அப்படியே தீயை மிதித்தவள்போல் நடுநடுங்கி "ஐயையோ! காசிக்குப் போனலும் கர்மம் தொலையவில்லை; ராமேச்வரம் போனலும் சனீச்வரன் விடவில்லை"...என்பதுபோல் எந்த துராத்மாவின் செய்கைக்குப் பயந்துகொண்டு இங்கு விமோசனத்திற்கு வழிதேட வந்தோமோ அதே ஏழரைநாட்டுச்சனிபோல் முன்தொடர்ந்து செல்கின்றதே...நல்லவேளையாய் பின்னலிருந்து முதலில் பார்த்தோமே. அங்குப் போனபிறகு எதிருக்கெதிராய்ப் பார்த்துத் திகைத்துப் பரிபவப்படாமல் கடவுள் காத்தாரே, அதுவே பாக்யம்.... அதுவே போதும்" என்று தனக்குள் பெரும் திகிலுடன் எண்ணியவளாய்த் திரும்பிவிட்டாள். நாளையதினம் வரலாம் என்ற யோசனையுடன் ஜனசமுத்திரத்தைப் பின்னேக்கி நீந்தியடித்துக்கொண்டு வந்தாள்.

எதிரில் முட்டியடித்துக்கொண்டு வரும் ஒருத்தி பாக்யத்தைப்பார்த்து "ஏம்மா! சுலபமாய்ப்போக முடிந்ததா? நீ ஜோஸியம் கேட்டாகிவிட்டதா? என்னடியம்மா சொல்லித்து அந்தத் தெய்வக் குழந்தை? என்ன ஆச்சரியம் போ! போன ஜன்மத்தில் நான் ஒரு சிறந்த பாடகியாய்—வித்வாம்ஸனியாய்ப்—பிறந்திருந்தேனும். ஆனால், பக்தியற்ற நிலைமையில் காசு பறிப்பதற்காகமட்டும் கலையில் உழைத்துப் பாடிப் பெருமைபட்டேனும். எந்த ஏழையானாலும் சரி, தர்மமானாலும் சரி பணத்தை வைக்காமல் ஒரு பாட்டுக்கூட பாடாமல் நிராகரித்துப் பணத்திற்கே அரிய கலையை விற்றுவந்தேனும். அதன் ரஸமறியாத முறையில் கலையை மதித்து வெறும் வ்யாபாரியாகவிருந்த பாவத்தினால் இந்த ஜன்மத்தில் சதா வீதியில் கூவிக்கூவித் திரியும் வ்யாபாரியாய், அதுவும் மூசுண்டல், மஸால்வடை, இடியாப்பம் முதலியவைகளை விற்று வருகிறேனும். இதைக் கேட்பாரற்றுப் பண்டம் பாழாகிவிடுகிறதாம். போட்டி வ்யாபாரிகளும் அதிகரித்துவிட்டார்கள். கலையின் பெருமை தெரியாது பணத்திற்குப் பறந்த பாவத்தினால் தின்பண்டத்தை விற்று வயிறுவளர்க்கப் போதாமல் திண்டாடுகிறேனும். என் மகளை அழைத்துப்போகிறேன். அவளுக்கு என்ன சொல்றதோ பார்க்கலாம்னு ஆசை... வாம்மா!" என்று தனது விஷயத்தைத் தானே தம்பட்டமடித்துக்கொண்டு சென்றாள்.

இதைக் கேட்ட பாக்யத்திற்குப் பின்னும் ஆச்சரியமாகவிருந்தது. "அடாடா! சுகமானாலும் துக்கமானாலும் பூர்வ ஜன்மவாஸனை என்று பெரியோர்கள் சொல்கிறார்களே! அதன் பலன்தான் இருக்கும். உம்!...போனஜன்மத்தில் யார் வாயை அடைத்து என்ன இம்சை செய்தாரோ! இந்த ஜன்மத்தில் என் கணவரின் வாய் இப்படியாகிவிட்டது. ஐயோ! அவரைச் சொல்வானேன்? அவர் மகானுபவர். அவர் உத்தமர். நான் செய்த பாவந்தான் இப்படியாகிவிட்டது. என்னை மணக்காமல் வேறு யாரையாவது அவர் மணந்திருந்தால்இத்தகையகஷ்டம் உண்டாகியிருக்காதோ என்னவோ?" என்று தனக்குள் விசனித்தபடியே கூட்டத்தை விட்டு வெளியே வந்தாள்.

பொழுதுசாயுந் நேரமாகிவிட்டது. "முன்பின் வந்திராத ஊருக்கு எப்படியோ பகவான் இழுத்துக்கொண்டு வந்து ஒரு புதிய ஆசையையும் கிளறிவிட்டு ஆட்டுகிறான். எப்படி ஊருக்குக் கொண்டுசேர்க்கிறானோ? அவன் கடமை" என்று நம்பிக்கையுடன் நடந்தாள். வாயிலிருக்கிறது வழி என்பது போல் போவோர் வருவோரிடம் வழியைப்பற்றிக் கேட்டுக்கொண்டே நடந்தாள்.

நன்றாக இருட்டிவிட்டது. வீட்டுக் கவலையும் மகனின் விசாரமும் பாதிக்க ஓடிவந்தாள். பாவம்! இவளுடைய கணவர் "இன்னும் பாக்யலக்ஷ்மியும் வரவில்லை; மகனும் வரவில்லையே; என்ன காரணமோ தெரியவில்லையே" என்று திகிலுடன் வாசலுக்கும் உள்ளுக்கும் அலைகிறார். ஏதேதோ எண்ணாததும் எண்ணிக் கலங்கி பகவானை வேண்டித் தொழுது ப்ரார்த்திக்கிறார். வீட்டில் இருப்புக்கொள்ளாமல் நாகம்மாள் வீட்டிற்குப்போய் விசாரித்தார். பாக்யம் அப்பொழுதே

வீட்டிற்குப் போய்விட்டதாகக் கூறக் கேட்டுப் பின்னும் திகிலுடன் வீட்டிற்கு வந்து தவிக்கையில், பாக்யம், "குழந்தை நாராயணன் வந்தானா?" என்று பதைத்தவாறு கேட்டுக்கொண்டே வந்தாள்.

அவர் கணவர், "இன்னும் வரவில்லையே! நீங்கள் இருவரும்தான் சேர்ந்து எங்கு போனீர்களோ? இன்னும் வரவில்லையே என்று நான் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறேன். நீ இன்னும் நாராயணனைப் பார்க்கவில்லையா? நீ இத்தனை நேரம் எங்குப் போயிருந்தாய்?" என்று வாய் குழறியவாறு கேட்டார். 5-30 மணிக்குத் தவறாது வந்துசேரும் நாராயணன் மணி 8 அடித்தும் இன்னமும் வரவில்லை என்றதைக் கேட்டதும் பாக்யத்தை ஒரு கலக்குக்கலக்கித் தலை சுற்றித் தள்ளியது.

10

மனங்கலங்கி நடுங்கியவாறு தவிக்கும் நாராயணன் தான் வீட்டிற்குச் சென்று "இச்செய்தியை எப்படித் தெரிவிப்பது? ஏற்கெனவே வருத்தப்படும் அம்மாவுக்கு இன்னும் அதிர்ச்சியாகிவிடுமே! என்ன செய்வது?" என்று குழம்பியவாறு வெளியே வந்தான். கலக்கத்துடன் நடக்கையில் கோயிலில் திருவிழாவை அறிவிக்கும் மேள சப்தமும் பெரிய மணியின் மனோகரமான நாதமும் சேர்ந்து சப்தித்த ஒலியைக் கேட்டதும் உடனே கால்கள் இவனைக் கோயிலுக்கு இழுத்துச் சென்றன. சங்கீதத்தில் மிகவும் ப்ரியமானவனும் சுமாராகப் பாடக்கூடியவனுமான நாராயணன், வருத்தத்தினால் குழறும் நெஞ்சுக்கு அந்த நாகஸ்வர இசையின் குளிர்ந்த சிலுசிலுப்பான நாதத்தின் வசீகரமும் காலத்தை யனுஸரித்து வாசிக்கும் ராமப்ரியா ராகத்தின் கவர்ச்சிமிக்க இனிமையும் ஒன்றுசேர்ந்து இவனுடைய கவலைக்கு மருந்து கொடுத்தது போலிருந்ததால், அங்கு உட்கார்ந்துவிட்டான்.

முக்கியமான அதிசயம் என்னவென்றால் தூரவிருந்து மேளத்தைக் கேட்டபோது யாரோ நாகஸ்வர வித்வான் என்று எண்ணி இருந்தான். அருகில் வந்து பார்த்தும் விசாரித்தும் அறியும்போது சாதாரண ஒரு உத்யோகஸ்தர் இக்கலையில் அபாரமான ஆர்வங்கொண்டு சிறுபிராயம் முதல் நன்றாகக் கற்றுக்கொண்டு அதை வ்ருத்திசெய்து பின் முதல் முதல் கோயிலில் வாசித்து பகவானுக்குக் கைங்கர்யம் செய்து பின்னர் மற்றப்படி உபயோகப்படுத்தவேண்டும்....என்ற நல்ல நோக்கத்துடன் கைங்கர்யம்செய்ய வந்திருப்பதாயும் அவர் நல்ல உயர்ந்த உத்தம ஜாதியைச் சேர்ந்தவர் என்றும் உத்யோகத்திலிருந்து மாதம் 500 ரூபாய் சம்பளம் பெறும்பெரிய

மனிதர் என்றும் கேள்விப்பட்டதும் நாராயணனின் வியப்பு கரைகடந்த வேகத்தில் சற்று முன்னிருந்த அதிர்ச்சியும் கல வரமும் சிறிது மறந்தேபோய்விட்டது என்றால் பொருந்தும். இந்த உத்யோகஸ்த மேளக்காரரைச் சுற்றி ஏராளமான உத்யோகஸ்தர்களே உட்கார்ந்திருக்கிறதையும் மேளம் வாசிப்பவருடைய குடும்பத்தினரில் ஒருத்தி உதவி நாயனம் வசிப்பதும் மற்றோர் தவில், ச்ருதி, தாளம், முதலியவைகள் வாசிப்பதுமான ஒற்றுமையைக் கண்டு நாராயணன் வியப்புக் கடலாடி கும்பலை நெருக்கியடித்துக்கொண்டு தானே முன்னால் போய் உட்கார்ந்தான்.

ராமப்ரியா ராகத்தை வாசித்து கோரின வரமோ ஸகுணமைய கோதண்டபாணி...என்ற கீர்த்தனையைஇவர் பாடிய போது அந்த நாதஸ்வரத்திற்கு இசைந்தபடி கம்பீரமாக அவருக்கருகிலிருந்த வனிதாமணிகூட வாசிப்பதைக்கேட்டுப் பின்னும் ஆச்சரியக்கடலில் திளைந்த ஜனங்கள் ஆரவாரித் தார்கள். "மேளத்துடன் இதுவரையில் பெண்கள் யாரும் வாசித்துக் கேட்டதேஇல்லை. மேளத்துடன் பாண்டு வாசித் திருப்பதுண்டு. பழைய காலங்களில் நலங்கு, ஊஞ்சல் முதலிய சடங்குகளில் சம்பிரதாயமாகப் பாடும் பாட்டை எதிர்மேளம் என்று வாசித்துக்கேட்டதுண்டு. கதம்ப வாத்யத்தில் (ஆர் செஸ்ட்ரா) மேளம் சேர்த்து வாசிப்பதுண்டு. இந்தமாதிரி மேளத்துடன் பெண்மணி ஜதையாய் வாசிப்பதைக்கேட்டதே இல்லையே. இது புதுமையிலும் புதுமையாக இருக்கிறதே" என்று ஜனங்கள் ஆரவாரித்தார்கள்.

அதுமட்டுமா? ஒரு கீர்த்தனம் முடிந்தது. நாயனம் வாசிப்பவர் உபன்யாஸம் செய்வதுபோல் "ஆஸ்திக அன்பர் களே! உலகத்தின் தர்மம் எப்படிக் காப்பாற்றப்படவேண்டு மென்றால் பழமையின் கம்பீரம், பழமையின் அத்புதசக்தி, அதன் சிறப்பு குன்றாது புதுமையின் அழகும் கலந்து மெரு கிட்டுப் புத்தப்புதிய விஷயங்களையும் கலைகளையும் கலை நுணுக் கங்களையும் வளர்த்து மக்களிடம் பரப்பி வ்ருத்தியாக்கிச் செழிக்கும் முறையில் பயன்படுத்திக் காக்கவேண்டும். நாக ரீகப்போக்கினால் பழமையை அடியோடு புறக்கணித்துப் புது நாகரீக மோகத்தில்—மேகத்தில்—சிக்கிஉழன்றால் பழமையின் சிறப்பில்லாத அச்செய்கை வ்ருத்தியாகமாட்டாது. நீங்களே பாருங்கள்: நாம் காணும் உலகம் மிகப்பழமையானது. அதி லுள்ள அனேகம் பொருள்கள் மிகப் பழமையானவை. சில புதுமையானவை. உலகம் பழயதாயினும் புதியபுதிய இனி மையைத் தேடிப் பறக்கிறது. அதையறிந்து காலதேசவர்த்த மானத்தின் வியப்புக்குத் தக்கபடி பழமையில் புதுமையைக் கலந்து ரஸிக்கச் செய்வதுதான் கலையின் வ்ருத்திக்கு அழகும் அழுத்தமும் ஆகும். சங்கீதத்தைப் பொறுத்தவரையில்

நீங்களே கவனித்துப்பாருங்கள். நாகஸ்வரம் பழயது. அதில் வாசிக்கப்படும் கீர்த்தனமும் ராகமும் பழயது. வாசிக்கும் பாணியும் பழயதுதான். ஆனால், இவைகளில் இதுவரையில் காணாத அதிசயத்தை நீங்கள் இன்று விசேஷமாகக் காண்பதாக—கேட்பதாக—நினைத்துப்பெரிதும் வியப்புற்று ஆனந்த மடைவதை உங்கள் உணர்ச்சிப் பெருக்கின் ஆரவாரத்தினால் காண்கிறேன். தனித்தனியே பார்த்தால் சகலமும் பழையது தான். அதே பழமையைப் புதுமையாகச் சோபிக்கும்படி என் குடும்பத்தினர் ஒன்றுசேர்ந்து இசைப் பஞ்சாமிருதத்தை உங்களுக்குக் கொடுக்கிறோமே, இதுதான் புதியது. இதைத்தான் பழமையில் புதுமை என்றேன். மக்கள் விரும்புவது புதுமை. அதிலும் காலத்தின் விசித்திரமான யந்திர சாதனங்களின்மூலம் பொருத்தமானதும் பொருத்தமற்றது மான புதுமைகளைத் தினேதினே காண்பதால் அவர்களுடைய ஆவல் அதிகரித்து அம்முறையில் அலைகின்றது. அந்த ஆவலை அறிந்து மக்களுக்குப் புதுமையாகவும் இருக்கவேண்டும், அமைதியாய் அனுபவிக்கும்படியான உன்னத கலையாயாயும் இருக்கவேண்டும்...என்பதனால்தான் நான் என் குடும்பத்துடன் இந்தக் கலையில் தொண்டுபுரிய முன்வந்தேன். இதோ பாடுகிறவள் என் தர்மபத்தினியாகும்;வேறுயாருமல்ல.

நேயர்களே!நன்றாகக் கவனியுங்கள். பழமையில் புதுமை எது என்பது ஒவ்வொன்றாக உங்களுக்குத் தெரிகிறது;முதலில் சொல்லியபடிநாகஸ்வரக் கலையோ,வாய்ப்பாட்டோ புதிதல்ல; பழமையானதுதான். ஆனால், புதுமையில் காண்கிறீர்கள். அதேபோல் நான் ஒருஉயர்ந்த உத்யோகஸ்தன் என்பதும் பழமைதான்! அதில் புதுமை நான் நாகஸ்வரம் வாசிப்பது. நாங்கள் ஒரு குடும்பத்தினர் என்பது புதுமையில்லை. அதையும் ஐக்யபாவமான புதுமையில் காண்கிறீர்கள். நாங்கள் தம்பதிகள் என்பது பழமைதான். இருவரும் கலைக்கும் பகவானுக்கும் மனமிசைந்த ப்ரேமையுடன் ஒரு மனப்பட்டுச் சேவை செய்கிறோமே, இதுதான் புதுமையில் நீங்கள் காண்கிறீர்கள். இந்தப் புதுமையைத்தான் உலகம் வேண்டுகிறது. அதை வளர்க்கத்தான் மக்கள் பாடுபடவேண்டும். கணவனும் மனைவியும் உயிரும் உடலும் என்பது நமது இந்து தர்மத்தின் லக்ஷ்யம். உயிரும் உடலும் பிரியாத ஐக்யதத்துவமுள்ள அபூர்வசக்தி பெற்றிருப்பதை அறிகிறோம். அதேபோல் கணவனும் மனைவியும் பிரியாத முறையில் கலைத்தொண்டாற்ற வேண்டும். கணவன் எந்தத்தொழிலைச் செய்தாலும் அதைக் கூடவிருந்து ஒத்தாசையுடன் பரிமளிக்கும் முறையில் மனைவி வேலை செய்யவேண்டும். யார்யாருக்கு என்ன விதம் மனைவியினால் உதவிசெய்யமுடியுமோ அந்தவகையில் அவள் முதலில் பயிற்சி பெறவேண்டும். அதில் குதர்க்க வாதிகளானால்

கோணக்கேள்விகள் கேட்கலாம். பள்ளிக்கூட வாத்தியாராக கணவரிருந்தால், ஓட்டல்காரராக இருந்தால், மளிகைக்கடைக் காரராக இருந்தால், சமயல்காரராக இருந்தால்...என்று யாரேனும் கேட்டால், அதற்கும் விடை சரியானமுறையில் உண்டு.

பள்ளிக்கூட வாத்தியாரின் மனைவி பள்ளிக்கூடபேப்பர் களைத்திருத்தலாம்; அதுஸம்பந்தமானவேலைகளைச்செய்யலாம். ஓட்டல்காரராயின் முதல்தரமான பக்ஷணங்களைக்கூடச் செய் யலாம். மளிகைக் கடைக்காரராயின் சிந்தாமல் சிதறாமல் நிறுத்துப் பொட்டளங்கட்டிக்கொடுக்கலாம்; கணக்கெழுதலாம். சமயல்காரராயிருந்தால் வடாம், அப்பளாம், ஊறுகாய் முத லிய பண்டங்களைத் தனே தயாரித்துக் கொடுத்து உதவலாம். கணவன் கொல்லத்து வேலை செய்தால் மனைவி சித்தாளாக இருக்கலாம். கணவன் வக்கிலானல் மனைவி குமாஸ்தாவாக உழைக்கலாம். கணவன் டாக்டரானல் மனைவி உதவி நர்ஸாக இருக்கலாம். கணவன் சாதாரண குமஸ்தாவானல் மனைவி யும் குடும்ப போஷணைக்கு அதே இடத்தில் டைப்ரைடிங் வேலை பார்க்கலாம். அல்லது டைப்ரைடிங் பாஸ் செய்தோ, அல்லது பாஸ்செய்யும் அளவுக்கே வேலைதெரிந் திருந்தால் வீட்டிலேயே உட்கார்ந்து ஜாப் வேலைகள் செய் யலாம். தையல் வேலை செய்யலாம். எத்தனையோ விதத் தில் பெண்களின் உழைப்பைக் கணவனுடன் ஒற்று மையாகப் பயன்படுத்தலாம். ஏதோ சில வேலைகள் தான் பெண்களால் செய்யமுடியாதவை. அவைகள் நீங்க மற்ற முறையில் தம்பதிகள் ப்ரகாசிக்கவேண்டுமென்பதே என் கோரிக்கை. இதில்தான் பழமையில் புதுமையைக் காண் கிறோம்.

தவிரவும், மக்களாய்ப் பிறந்த சகலருக்கும் சரீரத்தை வளர்க்க ஆகாரம் எத்தனை முக்கியமோ அத்தனை முக்ய மானது ஆத்மாவை வளர்க்க பகவத் பக்தி. அதை விதைப்ப தற்காகவே கவிகள் கோடிக்கணக்கான காவியங்களையும் கீர்த் தனங்களையும் செய்திருக்கிறார்கள். இப்போது நான் வாசித்த கீர்த்தனத்தை நாதஸ்வரத்தில்மட்டும் கேட்டால் இசையின் ஒலி மட்டுமே கேட்கும். அதன் அபூர்வமான அர்த்தபுஷ்டி யையும் கூடவே சேர்த்து அனுபவிக்கச் செய்வதற்கு வாய்ப் பாட்டுத்தான் முக்யம். இதோ பாடுகிறாள்; கேளுங்கள். (பாடுகிறாள்) இந்த நாகஸ்வரத்தில் நாத அலையை எழுப்பி ராகசஞ்சாரத்தை அள்ளி வீசிப் பின் இசைக் கடலிலிருந்து ஸாரமான நல்முத்துக்களைப் பொறுக்கித் தருவதுபோல் கீர்த்தனைகளை அர்த்தபாவம் சிதையாமல் பாடி, மக்களின் மனத்தில் ஒருங்கே இசையின் அமுதமும், அதன் அர்த் தத்தின் சுவையும் பதிந்து பக்திக் கனலை உண்டாக்கி

அதன்மூலம் நமது மக்கள் உய்யும் மார்க்கத்தை இந்தக் கலையின் மூலம் ஸேவைசெய்ய நாங்கள் இறங்கி இருக்கிறோம். 'எங்கள் இஷ்டத்தைப் பூர்த்திசெய்து கோரின வரங்களைக் கொடுத்துக் காப்பாற்று, கோதண்டபாணி' என்று ஸ்ரீ சக்ர வர்த்தித்திருமகனை ப்ரார்த்தித்துக்கொண்டு இந்தக் கீர்த் தனத்தைப் பாடி வேண்டினேன். மகா ரஸிகர்களான உங்க ளிடம் ஆசியைக் கோருகிறேன்''

என்று நாதஸ்வர வித்வானா? அல்லது பெரிய ப்ரஸங் கியா? உபன்யாஸகரா?...என்று ப்ரமிக்கும்படியாய்ப் பேசி விட்டுத்திரும்பவும்ஜம்மென்று காம்போதிராகத்தைஆலாபனம் செய்து அதில் மா ஜானகி சட்டபட்டக மகராஜு ஐதிவி... என்கிற கீர்த்தனையை வாசித்தும் மனைவி பாடியும் நிறுத்திப் பின்,'' அன்பர்களே! ஸ்ரீராமபிரான் சரிதையை உலகம்பூராவும் பரிமளிக்க ப்ரமிக்கச் செய்த காரணபூதை ஸ்ரீமகாலக்ஷ்மி யான ஸீதாபிராட்டிதான் என்பதை உலகமறியும். ஸீதா தேவி, 'ஸ்ரீராமன் காட்டுக்குப்போய்த் திரும்பிவரட்டும், நாம் மகாராஜாவின் குமாரி, மகாராஜவின் மருமகள், மகாராஜா வின் மனைவி, ஆகையால் சுகுமாரமாய் அரண்மனையிலேயே ஆனந்த வாழ்வு வாழலாம், தந்தைசொல்லுக்குக் கடமைப் பட்ட ராமன் கானகம் போகவேண்டுமே யல்லது நான் ஏன் போகவேண்டும்?'...என்று இக்காலத்திய சில நாகரீகப் பெண் களைப்போல் தேவியும் இருந்திருப்பாளேயாயின் ராமாயண மேது? ஸ்ரீராமனுக்குத்தான் மகிமை ஏது? ஸ்ரீராமனின் பெருமைபூராவும் ப்ரகாசிக்கச்செய்தவள் ஸ்ரீமகாலக்ஷ்மியான ஜானகிதேவியாகும். அதனால்தான். பரம பக்தசிகாமணியான ஸ்ரீ த்யாகராஜரும் 'எங்கள் ஜானகியை நீ கைப்பிடித்ததனுல் தான் மகாராஜனுகிவிட்டாய்' என்று உத்ஸாகமேலீட்டால் கதையின் ஸாரத்தை விளக்கிச் சிறிய கீர்த்தனையாய்ப் பாடி யிருக்கிறார். நவரஸங்களில் சிறந்த ரஸமானது கருணாரஸம். அக்கருணாரஸத்திற்குச் சேர்ந்த பல ராகங்களில் காம்போதி மிகச் சிறந்தது. அத்தகைய கருணா ரஸத்தையுடைய காம் போதிராகத்தில்தான் பெண்வீட்டுக்காரரைப்போல பாவித்து ''மாஜானகி சட்டபட்டகா''......என்று அதாவது மாதிரியாய்த் தீக்ஷ பெண்ணினுலேதான் ராமன் பெருமையடைந்தான் என்று பாடினார்.

பழங்காலத்தில் 'மாப்பிள்ளை ஏசல், சம்மந்தி ஏசல் என்று பரிகாஸப் பாட்டுக்கள் பாடுவார்கள் பெண்வீட்டுக் காரர்கள். ''எங்கள் பெண்ணாலே வந்ததல்லவோ இந்த போகம்'' என்று பாடுவார்கள். அதற்கு பிள்ளை வீட்டார் பாடுவார்கள். இதொரு தமாஷாக இருக்குமாம்.

18370.

என் தாயார் அடிக்கடி சொல்வார்கள். இந்த ரகஸியத்தை ஸ்ரீ த்யாகராஜர் அனுபவித்துப் பாடியதாகவே நான் நினைக்கிறேன்'' என்று விவரித்துக் கூறும்போது ஜனங்கள் செய்த ஆனந்த ஆரவாரத்திற்கு எல்லையேஇல்லாது கரைபுரண்டது.

உண்மையில் நாராயணன் தன்னையே மறந்துபோய் இந்த அதிசயக்காட்சியைக் கண்டும்கேட்டும் இந்த உணர்ச்சியிலேயே லயித்ததோடு நாதஸ்வர வித்வானின் ஆணித்தரமான வார்த்தைகள் அவன் இதயத்தில் பதிந்து வேலை செய்யத் தொடங்கின. தனக்கும் மனமொத்த ஒரு உத்தம நங்கை மனைவியாக வந்தாலன்றி பிறர் கெடுபிடி கட்டாயத்திற்காக ஒரு கல்யாணம் செய்துகொள்வதா?...என்ற எண்ணம் பளிச்சென்று தோன்றியது.

அதே கூட்டத்தை இவன் ஒருமுறை உற்றுப்பார்க்கும் போது இவனுடைய ஆபீஸ் பெரிய உத்யோகஸ்தர், இவனைச் சற்றுமுன்பு அழைத்து விவாக விஷயமாய்ப் பேசிய அதிகாரி, அங்கு உட்கார்ந்து தாளம்போட்டுத் தலையை ஆட்டி ஆனந்தமாக இசை விருந்தைச் சுவைப்பதைக் கண்டதும், பழைய பயமும் திகிலும் குபீரென்று வந்து சூழ்ந்துகொண்டதால் திடுக்கிட்டான். உட்கார்ந்தபடியே பின்னுக்கு மெல்ல நகர்ந்து நகர்ந்து வெளியேற எத்தனித்தான். எஜமானர் தன்னைப் பார்க்காதிருக்கவேண்டுமே என்று பயம் வாட்டியது.

11

பிள்ளைக்கு எண்பது வயதாகியபோதிலும் பெற்றோர்களுக்குத் தம் மகன் 'குழந்தை' என்கிற நிகரற்ற வாத்ஸல்யத்துடன் பிறரிடம் பேசுகையில்கூட 'எங்கள் குழந்தை' என்று பேசுவதை நாம் நாளைக்கும் கேட்கிறோம். அந்த ஒரு தனித்த இன்பம்—அதன் உணர்ச்சி—பெற்றோருக்குத்தான் தெரியுமேயன்றி மற்றோர் அதைக் கேட்டால் பரிகசித்தும் பேசுவார்கள்.

"குழந்தை இன்னும் வரவில்லையே; ஒருவேளை அந்த முரடனால் ஏதாவது விபரீதம் நேர்ந்துவிட்டதோ? சரியாக 5-30 மணிக்குப் பட்சியைப்போல் பறந்துவந்து கூட்டிலடையும் பையன் இன்று ஏன் வரவில்லை? ஒருகால் இந்த அதிசயமான தெய்வக் குழந்தையின் விஷயம் அவனும் கேள்விப்பட்டு அங்குச் சென்றிருப்பானோ? எங்குப் போய்த் தேடுவது? மணி 9 அடிக்கப்போகிறதே!'' என்று பாக்யம் தவியாய்த் தவிக்கும்போது நாராயணன் மிகவும் சோர்வுடன் முகத்தில் கவலைக் குறியின் ரேகை படர்ந்து வாடிய நிலைமையில் வந்து சேர்ந்தான்.

'வயிற்றில்பாலைவார்த்தாயா?என்னப்பா!...என்றுசந்தோஷத்துடன் பாக்யம் வயிறுகுளிர மகனைநோக்கி "ஏண்டா குழந்தாய்! இத்தனை நேரம். நாங்கள் சாதாரண நாட்களிலேயே தவிப்போம்; இன்று நாங்கள் எப்படித்தான் துடி துடிப்போம் என்று நீ உணரவேண்டாமா? அந்த முரடனால் என்ன நேர்ந்ததோ? என்ன நிலைமையில் நீ வருகிறாயோ? என்று கதிகலங்குகிறோம்... அவன் என்ன கேட்டான்?"... என்று மிகுந்த வாஞ்சையுடன் விசாரித்தாள்.

நாரா:—நல்லவேளையாக அவன் ஆபீஸுக்கே வரவில்லை. உடம்பு சரியில்லையாம். படுத்திருக்கிறானாம். லீவு போட்டு விட்டானாம். அந்த பயம் இல்லை என்றுபார்த்தால் இன்னொரு உறுமல் வந்துவிட்டது.

பாக்:—என்ன? உடம்பு சரியில்லை, படுத்திருக்கிறானா? இப்போதுதான் அவனைக் கொட்டாப்புலிபோல் வந்ததைப் பார்த்தேனே. அவன்மட்டுமா? அவனுடைய சகாக்கள் புடை சூழத்தானே வந்தான். எதற்காக இம்மாதிரி சொன்னான்? வேறு என்ன நடந்துவிட்டது?

நாரா:—நீயாம்மா அவனைப் பார்த்தாய்? எங்குப் பார்த்தாய்?

பாக்:—(நடந்த சகல விஷயங்களையும் கூறி) அங்குதான் பார்த்தேன்... வேறு எந்த பூதம் வந்துவிட்டதப்பா?

நாரா:—(ஆபீஸில் நடந்ததைக் கூறி) இந்த தர்மசங்கடத்திற்கு நான் என்னம்மா செய்வேன். இதிலேயேமனங்குழம்பிப்போய் வருகையில் ஒரு அத்புத சம்பவத்தைக் கண்டேன்—கேட்டேன். பழமையில் புதுமை ப்ரகாசிப்பதைக்காண உள்ளம் பூரித்துப் பொழுதுபோவதே தெரியாமல் இருந்துவிட்டேன். என்னுடைய போதாக்காலத்தின் பலனோ என்னவோ அங்கு அதே அதிகாரியும் உட்கார்ந்திருப்பதைப்பார்த்து ஓடிவந்து விட்டேன். நாளைக் காலையில் நான் பதில் சொல்லவேண்டுமாமே? என்னம்மா செய்வது?... அப்பா! இதற்கோர் வழி சொல்லுங்கள்...

பாக்:—என்ன சோதனைகாலம்? ஆதியில் கொள்கொம்பின்றித் தவித்தகொடிபோல் நாம் திக்கின்றித் தவித்தகாலத்தில் நமக்குப் பலவிதத்திலும் உதவி செய்த நாகம்மாளின் பேத்தியை உனக்குக் கொடுக்கவேண்டுமென்று நாகம்மாளின் மகள் கடிதம்எழுதியிருந்ததை நாகம்மாள் காட்டிவருந்தினாள். அந்த சோதனை போதாதென்று இந்தப் புதிய சோதனையொன்று வரவேண்டுமோப்பா?

நாரா:—எம்மா! நாகம்மாளின் பேத்தி விஷயத்தில் சோதனை என்ன? நமக்கு நாளைக்கும் பரம உபகாரம் செய்து வரும் அவர்களுக்கு நாம் கடமைப் பட்டிருக்கிறோமல்லவா? நீ சொல்வது ஒன்றுமே புரியவில்லையேம்மா. விளக்கச்சொல்.

பாக்யம்:—குழந்தாய்! புரியாத விதி தாண்டாப்பா அதில் தாண்டவமாடுகிறது! சகலமும் நன்ருயிருந்தால் நான் மறுப்பேனு? அந்தப்பெண் நொண்டி...

நாராயணனைத் தூக்கிவாரிப் போட்டது. குபீரென்று வெயர்வை வெள்ளம் வெந்நீர்போல் பொங்கியது. முகம் சிவந்து சுருங்கியது. "நொண்டி, நொண்டியா?" என்று வாய்க்குள் முணுமுணுத்தான். சற்றுமுன்பு கோயிலில் நாதஸ்வர வித்வானின் ஆச்சரியமான சொற்பொழிவைக் கேட்டு மனத்தில் எங்குமில்லாத ஒரு ஆசையின் வேகம் குபீரென்று இதயத்தில் உண்டாகிக் குளிரச் செய்ததும் அந்த அத்புத உணர்ச்சியை மானஸீகமாக அனுபவித்து இன்புற்றதும் பிறகும் அந்த எண்ணத்துடனேயே வீட்டிற்கு வந்ததும் ஏற்கெனவே ஆபீஸில் நிகழ்ந்த சம்பவத்தின் தாக்குதலால் கலங்கி வீட்டிற்குவந்ததும் இப்போது தாயார் சொல்லிய விஷயமும் ஒன்றுகூடி இவனை அப்படியே தவிக்கச் செய்துவிட்டன.

மகனின் தடுமாற்றத்தைக் கண்ட பாக்யம் திடுக்கிட்டுப் போய் "நாராயணு! குழந்தாய்! ஏனப்பா உன் முகம் எப்படியோ ஆகிவிட்டது? என்ன அப்பா நினைக்கிருய்?...என்று பயமும் அன்பும் கலந்தமுறையில் கேட்டாள்.

நாரா:—அம்மா! நான் எதையும் தப்பிதமாக நினைக்கவில்லை. நியாயத்தையே—தருமத்தையே—நமது கடமையையே—நினைக்கிறேன். அரிசி என்று அள்ளுவாரும் உமி என்று ஊதுவாருமின்றி ஆபத்தான நிலைமையில் புகலிடமின்றி நீ தவித்த காலத்தில் அல்லாடும் கொடிகளுக்குக் கொடி சுற்றும் மரம்போல் உதவியளித்த நாகம்மாவின் பேத்தி விஷயத்தில் நடந்துகொண்டது சுத்த தவறு; மகா பாதகமாகும். அம்மா! அடைக்கலமென்று வீழ்ந்த நமக்கு அபயம்கொடுத்த அம்மாளுக்கு நாம் ப்ரதி உபகாரம் செய்யாமல் அபயமளித்த இதயத்தைச் சிதைக்கச்செய்வதா தருமம்? அவர்களுடைய ஒத்தாசை ஆதியில் உனக்கில்லாதிருந்தால் நம் கதி என்னவாகியிருக்கும்? இதை நீங்கள் யோசிக்காமல்...

பாக்யம்:—நாராயணு! நாராயணு! இதோ பாரு. நீயா இந்த வார்த்தை சொல்கிருய்? அந்தப் பெண் நொண்டியாயிற்றேப்பா?...

நாரா:—அம்மா! யோசித்துப் பாரு; நாகம்மாவின் மற்ற பேத்திகளைப்பற்றி பேச்சுவந்ததா? நொண்டி, முடம், ஊமை, செவிடு, குருடு முதலியவைகளுக்குத் தானேம்மா உதவி புரியவேண்டும். இதைத்தானே பிறர் மதிக்கமாட்டார்கள். நொண்டிப் பெண்ணைப் பிறர் மணக்காமல் நிராகரித்துவிட்டதனுல்தானே அந்தம்மாள் தன் தாயாருக்கு

எழுதியிருக்கிருள். உனக்குச் செய்த உபகாரத்தைச் சுட்டிக் காட்டியும் சொல்லியிருக்கிருளே! அப்படிக்கிருக்க நீ தட்டிப் பேசியிருக்கலாமா?...

பாக்:—நாராயணு!...நொண்டிப் பெண்ணையா?...

நாரா:—ஆம்! நொண்டிப்பெண்ணைத்தானம்மா சொல் கிறேன். நீ நல்ல பெண்ணுகப் பார்த்துக் கல்யாணம் செய்து வைத்தபிறகு காலவிதியினுல் சருக்கிவிழுந்தோ விபத்து நேர்ந்தோ ஊனமாகிவிட்டால் என்ன செய்துவிடுவா யம்மா? என், அப்பாவின் தலைவிதி ஒன்றே நமக்குப் போதாதா? அதற்கு இப்போது என்ன செய்கிருய்? உன் னைப் பார்ப்பவர்கள் "ஆகா என்ன உத்தமி! அமைதிக்கு அஸ்திவாரமே இந்தம்மாள்தான்!" என்று வியக்கின்றுர்களல் லவா? மாற்றி அமைக்கமுடியாத நிலைமை அவரவர்களின் பாபத்தினுல் உண்டாகிறது. நாகம்மாள் வெளிக்கு இப்படி நடந்துகொண்டாலும் உள்ளுக்குள் கட்டாயம் நீ சொல்லி யது தவறு என்று வருந்தித்தான் இருப்பார்கள்... அம்மா! ஏதோ தெரியாத்தனமாய் சொல்லிவிட்டேன் என்று கூறி மன்னிப்புப் பெற்றுக்கொண்டு விவாகத்தை முடிக்கும்படி சொல்லிவிட்டு வாம்மா!.....

என்றதைக் கேட்டு இன்னது செய்வதென்று தெரியாது பாக்யத்தின் தலை சுழல, அவள் கணவரின் கண்களில் ஆனந் தக்கண்ணீர் பெருகியது. சத்யசந்தனுன மகனின் நியாய மான வார்த்தைக்கு உள்ளம் மகிழ்ந்து அவனைத் தட்டிக் கொடுத்தார்.

கண்ணீர்பெருகத் தொண்டையடைக்கும் துக்கத்துடன் பாக்யம்..."நாராயணு! நொண்டிப்பெண்ணையா தெரிந்து மணக்க நீ துணிகிருய்? அப்பா! என் நெஞ்சு பொறுக்க வில்லையே! ஏதோ நான் செய்த பாபத்தின் பயங்கரந்தான் அப்பாவின் கதி இப்படியாகிவிட்டது. அந்த துரத்ருஷ்ட மும் அதிர்ச்சியும் போதாமல் நொண்டியையா நீ மணந்து நான் பார்த்துச் சகிப்பது; நாராயணு! இந்தப் பிடிவாதம் வேண்டாமப்பா! எனக்கு நாகம்மாள் செய்துள்ள உபகா ரத்தை நான் மறக்கவில்லை. என்னுயுள் காலம்பூராவும் அவர் களுக்கு நான் என் சரீரத்தைச் செருப்பாயுழைத்துக் கடமை யைச் செய்துவிடுகிறேன். இந்த ஒரு சோதனைக்கு என்னை ஆளாக்காதேப்பா, நாராயணு!...எனக்கு பகவான் கொடுத் துள்ள ஒரே ஒரு செல்வத்தை நான் எத்தனையோ சந்தோஷ மான முறையில் கண்டுகளிக்க ஆசைக் கோட்டை கட்டு கிறேன். அந்த ஆசையில் மண்ணைப்போடாதே நாராயணு! ...என்று முடிப்பதற்குள் "அம்மா! நீ சொல்வது சற்றும் நியாயமில்லை. நீ போய் சொல்வதற்குத் துணியவில்லை என் ருல் நானே போகிறேன், அம்மா! அன்னமிட்ட கைகளுக்கு

அர்ச்சனைசெய்து இன்புறுவது தருமமேயன்றி அதை ஒடிப் பது தகாது. இது தெய்வத்திற்கும் ஒப்பாது. நீ யோசனை யில்லாமல் சொல்லிவிட்டதற்கே நமக்குப் பகவான் என்ன தண்டனை விதிப்பாரோ என்று பயப்படுகிறேன். நீ விஷய மறியாதவளாம்மா? உடனேபோய்ச் சொல்லிவிட்டு வாம்மா! அவர்கள் கடிதம் எழுதிவிடப்போகிறார்கள். யார்யார் என் னென்ன வரன் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறார்களோ அதுபோலத்தானேம்மா நடக்கும்! கண்ணீர் விடாதே, கலங்காதே! தைரியத்தை இழக்காதே!...அப்பா! போகச் சொல்லுங்கள்'' என்று நன்றி செலுத்தும் ஒரே நோக்கத் துடன் சொன்னான். பாக்யலக்ஷ்மியின் மனம் உடைந்து அவனை யறியாத சங்கடத்தைச் செய்து வதைத்ததில் பதில் கூட பேசமாட்டாது தம்பித்து நின்றாள்.

அவளுடைய இதயத்தில்...''பாக்யம்! செய்நன்றியை மறக்காதே....அங்கஹீனர்களுக்குத்தான் ஆதரவு காட்ட வேண்டும்....பின்னடையாதே......உன் மகன் சொல்வது சரி யான வார்த்தை'' என்று ஒரு புறம் ஏதோ ஒன்று சொல் கிறது...''ஐயோ உன் கணவன்தான் அரை ஊமை போலாகி விட்டான். உன் மருமகளுமா நொண்டியாய் வரவேண்டும்! இது என்ன சாபக்கேடு?'' என்று இன்னொருபுறம் ஓலமிடு கிறது. இரண்டு உணர்ச்சிக்கும் மத்தியில் அவள் உள்ளம் துடித்துத் தத்தளிக்கிறது.

12

''எனக்குக்கூட இந்த மர்மத்தின் ரகஸியம் ஒன்றுமே தெரியவில்லை. அன்று காரில் கமலாப் பழங்களை வாங்கிச் சாப்பிடுகையில் பழத்திற்குள் ஒரு கடிதம் இருந்ததையும் அவர் அதைப் படித்ததையும் பிறகு நடந்துகொண்டதை யும் பார்த்தால் மர்மமாகவே இருக்கிறதே. அக்கடிதம் ஒரு கமலாப் பழத்திற்குள் எப்படி இருக்கும்? அது யார் எழுதி யிருப்பார்கள்? இப்படி யொரு ரகஸியமான விஷயம் நமக் கும் தெரியாமல்கூட வைத்திருப்பதால் உண்மையில் ஏதோ ரகஸியமோ, அல்லது இன்னும் எதுவோ கட்டாயம் இருந்தே தீரவேணும். முன்பொருநாள் ஒரு கம்பீரமான புருஷனை எங்கோ கூட்டத்தில் பார்த்துவிட்டதுதான் தாம தம். ஆள் எப்படியோ முகம்மாறி படபடப்பு உண்டாகிய துடன் அடுத்த க்ஷணமே மறைந்துவிடவில்லையா! அதையும் நாம் சந்தேகித்தோம். இன்று இதையும் சந்தேகிக்கிறோம். உண்மையை எப்படி அறிவது?'' என்று வேதகிரியுடன் காரில் வால்போல் சுற்றும் கூட்டத்தினரில் ஒருவன் மற்றவர் களைப் பார்த்துக் கேட்டான்.

மற்றெருவன்:—நான்கூட அப்படித்தான் சந்தேகப்படு கிறேன். கமலாப்பழத்தில் கடிதத்தைப் பார்ப்பதற்கு முன்பு இருந்தமாதிரி என்ன? பார்த்தபிறகு அவர் சடக்கென்று சகலத்தையும் மாற்றிக்கொண்டு உடம்பு சரியில்லை என்று கூறி வீட்டிற்குச் சென்றுவிட்டாரே, அதென்ன ரகஸியம்! என்றுதான் நானும் யோசனை செய்கிறேன்....ஏன் மனேன் மணீ! உனக்குத்தான் சகலமும் தெரிந்திருக்குமே! விஷயம் என்ன எங்களுக்குச் சொல்லேன்—என்ருன்.

மனேு:—எனக்குக்கூட ஒன்றுமே புரியவில்லையே! அவருடன் பழகுகிருேமேயன்றி நம்மையும் அறியாமல் பல ரகஸ்யங்கள் அவரிடமிருப்பதாகத் தெரிகிறது! ஏற்கெனவே நான் சந்தேகப்பட்டேன். இன்று இதை நேரில் பார்த்தபிறகு சற்று பயமாகக்கூட இருக்கிறது.

மதனசுந்தரி:—நான் முன்பே ஒரு தினம் உன்னிடம் சொல்லவில்லையா? இந்த மனிதனைத் தேடிக்கொண்டு போலீஸார் வந்ததாகவும் அதைக்கண்டு நான் பயந்துவிட்டதாயும் சொன்னேனே! நினைவிருக்கிறதா? அதைப்பற்றிப் பிறகுநான் விசாரித்ததில் ஏதோ ஒரு ரகஸியமான கொலைக்கேஸில் இவன் சம்மந்தப்பட்டு மறைந்திருப்பதாயும் போலீஸார் ஒரு புறம் ரகஸியத்தைக் கண்டுபிடிக்க முயற்சிப்பதாயும் துப்பறியும் வீரசிங்கமாகிய ராஜாராம் நாயுடுவிடம் கொலையுண்டவரின் ஆட்கள் தகவல் கொடுத்து எப்படியாவது கண்டு பிடித்துத் தரவேண்டும் என்று கேட்டிருப்பதாகவும் ஒரு புலன் எனக்கு கிடைத்தது. அதன்பிறகு நான் அந்த மனிதனிடம் அதிகம் சேருவதில்லை; விலகிவிட்டேனே. அது தெரியவில்லையா?

சுந்திரவதனு:—ஆமாம், மனேன்மணி! அந்தப் பழக்காரி சம்பவத்தை நாம் முதலில் ஏதோ தமாஷாக நினைத்தோமே! இந்தப் பஞ்சகாலத்தில் கூடைப்பழத்தையும் அக்ரமமாக இவர் சூரையாடியதற்குச் சற்றும் மனங்கோணமல் கூடைப்பழத்தையும் இழந்துவிட்டுச் சந்தோஷமாய் நின்றதை நானே பார்த்தேன். சாதாரண பழக்காரியாயிருந்தால் வீதியில் அனர்த்தத்தை விளையவிட்டுக் கத்தி தடபுடல் செய்யமாட்டாளா? ஒருவேளை அந்தப் பழக்காரியே துப்பறியும் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருக்குமோ?...ஆமாம்! யாரைக் கொலை செய்ததாக வதந்தி? எனக்கொன்றும் புரியவில்லையே...

மதன:—நானும்தான் புரியாது தவித்தேன். அந்த மனிதன் உள்ளாழத்தைத்தான் ஒருவராலும் அறியமுடியவில்லையே! யாரோ ஒரு பெரிய பாங்கராம். அவரைக் கொலை செய்துவிட்டுப் பணத்தை அபகரித்துவிட்டதாகச் சில மாதங்களுக்கு முன்பு பத்திரிகையில் பார்த்தேன். ஆனல், அந்தக் கொலையில் இவர் சம்பந்தப்பட்டிருப்பார் என்று நான்

நினைக்காமல் எப்போதும்போல் சகஜமாகத்தானிருந்தேன். கொலை செய்யப்பட்டதற்குக் காரணமும் தெரியவில்லை. பணந் தான் காரணம் என்று முடிவுகட்டி அதற்கொரு மனிதனைப் பிடித்துக் கைதியாக்கி வழக்கையும் நடத்திவருகிறார்கள். கொலைக்குற்றத்திற்கு ஆளாகியுள்ள மனிதனின் மனைவியும் கொலையுண்டு இறந்தமனிதனின்பெண்ணும் உயிர் நேசிகளாம். அவர்கள்தான் ரகஸ்யமாய் நாயுடுவிடம் கேஸை ஒப்படைத் திருக்கிறார்களாம்.

சின்னஸாமி:—அடேடேய்! இவ்வளவு விவரம் உனக்குத் தெரியுமா? சரிதான்! இனிமேல் நாமும் ஜாக்ரதையாகத் தானிருக்கவேண்டும். இந்த மகானுபாவனின் சிநேகிதம் நமக்குக்கொலைவழக்கில் மாட்டி ஆபத்தை விளைக்காதிருந்தால் போதும். அதோடு நாயுடுவின் சாமர்த்யத்தை நினைத்தாலே பயமாயிருக்கிறது. அடேயப்பா! வைதேகியின் வீட்டுக் கொலைவழக்கை எப்படித்தான் நடத்தி அபாரமான ஜெயத் தைப்பெற்றார். இன்னும் எத்தனையோ வீட்டின் கொலைகளி லும் கொள்ளைகளிலும் இவர் வேலைசெய்து ஆச்சரியகரமான விதம் வெற்றிக்கொடி நாட்டியிருக்கிறார். இவர் ப்ரவேசிக்கும் இடங்களில் தோல்வியே இல்லை. ஆகையால் நாம் அல்ப ஆசைக்கு இவனுடன் கூட அலைந்து பெரியவிபத்தில் மாட்டிக் கொள்ளாது தப்பிக்கும் வழியைத்தேட வேண்டும். நான் அவ சரகாரியமாய் ஊருக்குப்போக வேண்டியிப்பதால் நாளையே புறப்படப்போகிறேன்.

ரமாமணி:—என்ன! என்ன! நான் சமீபத்தில் வந்து சேர்ந்திருப்பதால் ஒன்றுமே புரியவில்லையே! நீங்க ளெல்லாம் பேசுவதைப் பார்த்தால் எல்லாமே கலகலத்துவிடும் போலல்லவா தோன்றுகிறது. அந்த மனிதன் பெரிய உத் யோகஸ்தன் என்று கூறுவதால்தானே நாங்கள் ப்ரமித்துப் போய் வந்துசேர்ந்தோம்.

பெரியகண்ணு:—இதோ! நாம் இப்படிக் குழம்பியும் சந்தேகித்தும் அம்மனிதனைப்பற்றியே பேசுவதில் இதுவேறு பெரிய விபரீதத்தில் முடியும்போல் பயமாயிருக்கிறது. ஆகை யினால் இனிமேல் எந்தவிதம் நடக்கவேண்டுமோ! அப்படி உஷாராய் நடந்துவந்தால் விபத்துவராமல் தப்பலாம்..இதோ பாருங்கள், நான் உண்மையாய்க் கேட்கிறேன்; யாராவது அந்த மனிதன் செய்துள்ள கொலைக் குற்றத்தில் நேர்முகமா கவோ? மறைமுகமாகவோ? சம்பந்தப்பட்டிருந்தால்...

என்று முடிப்பதற்குள்எல்லோரையும் தூக்கிவாரிப்போட் டுக் கலக்கியது. 'ஐயையோ நானில்லை, நீயில்லை' என்று கத் திக் கூறுகையில் மின்மினிதேவி அங்கு பரபரப்புடன் வந்து "ஒரு அதிசயம் கேட்டீர்களா? திருமால்புரம் என்கிற ஊரில் உலகத்தில் கண்டிராத அத்புதம் நடைபெறுகிறதாம். 5 வயது

கூடநிரம்பாத குழந்தை சோசியம் சொல்கிறதாம். குழந்தையின்வடிவழகோ சொல்லமுடியாத ஆச்சரியமாயிருக்கிறதாம் போன ஜன்மத்தின் பிறப்பு முதலியவைகளைச் சொல்கிறதாம். கூட்டம்ஏராளமாகக்கூடி இடமே இல்லாதபடி நசுக்குகிறதாம். இதைக்கட்டாயம்நாம்போய்ப்பார்க்கவேண்டும் என்று நமது எஜமானிடம் தெரிவித்தேன். அவருக்கு இன்று என்னமோ கலக்கம். காரணம் தெரியவில்லை. ஆதலால் சள்ளென்று சீறி விழுந்தார். பிறகு எதையோ எண்ணியவாறு நாளைய தினம் போகலாம் என்று சொல்லியிருக்கிறார். நாங்கள் போகையில் நீங்களும் வந்தால் வரலாம்...

இதைச் சிலர் ஆமோதித்தார்கள். சிலர் வெறுத்தார்கள். சிலர் பயந்தார்கள். அந்தந்த உணர்ச்சிக்குத் தகுந்தபடி விமர்சனங்கள் கிளம்பின: “ஆமாம், இதெல்லாம் வெறும் செப்பிடுவத்தை போன்றதாகும். போன ஜன்மமாவது சொல்வதாவது! எனக்கு நம்பிக்கை இல்லை. வெறும் வேஷம்!......அடேயப்பா அது பொய்யோ? நிஜமோ? எதுவானாலும் எங்களுக்குவேண்டாம். ஏதாவது ஏடாகூடமாய் அவலக்ஷணமாய்ச் சொல்லிவைத்தால் எத்தனை விகாரமாக முடியும்? நமக்கு இப்போதுள்ள நிலைமையின் ஊஞ்சலாட்டம் தெரிந்தே இருக்கறது. இதைப்பற்றி இன்னும் எதற்காக அறியவேண்டும்? எனக்குப் பிடிக்கவில்லை, வேண்டாம். நான் வரவில்லை” என்றான், சின்ன கண்ணு.

“வாஸ்தவம்! சின்னகண்ணு முன்யோசனைக்காரன். சாமர்த்தியசாலி; எஜமானருடன்நம்மையும் சேர்த்துப் பார்க்கும்போது இந்தக் கொலையில் எஜமான் ஒருவேளை சம்மந்தப்பட்டிருந்தால். அவருடன் நம்மையும் சோத்து சம்மந்தப்படுத்திப் பேசிவிட்டால், கோவிந்தா தான்! அதோடு அத்யாயமே முடிந்துவிடும்” என்று ரமாமணி பேசுவதைக் கேட்ட மின்மினி தேவி...“ஹா...கொலையா?...கொலையா?” என்று கூவி அப்படியே மயக்கமாகச் சாய்ந்துவிட்டாள். அவளது இதயவேகத்தின் துடிதுடிப்பு மிதமிஞ்சி அடித்துக் கொண்டது கண்டு எல்லோரும் இடிந்துவிட்டார்கள். மர்மத்திற்குள்ளும் மர்மமாய்த்தோன்றி வியப்புக்கடலாடச் செய்தது, இச் செயல்.

“மின்மினி!...மின்மினீ! ஏன் இப்படி ஒரேயடியாய் சாய்ந்துவிட்டாய்? இதோ பாரு...மின்மினீ” என்று ரமாமணி அவளைத்தேற்றி எழுப்பினாள். மின்மினி சற்று சமாளித்துக்கொண்டு “ஐயையோ! கொலையா!...எனக்கு ஒன்றுமே தெரியாதே; கொலை என்கிற பெயரைக்கேட்கும் போதே என் தலைசுற்றுகிறதே! கொலையா?...கொலையா!...எங்கு?...யாரு!

...வேண்டாம்; எனக்கு என்னமோ செய்கிறது. நான் போய் விடுகிறேன்'' என்றுகூறி நடுங்கியபடியே தடதடவென்று போய்விட்டாள். ''வெகு உத்ஸாகமான சோசிய விஷயத்தைக் கொண்டுவந்தவளும் அவள்தான். கொலை என்ற உடனே நிலை கலங்கிய பயத்துடன் எழுந்து ஓடிவிட்டவளும் அவள் தான். இதென்ன விசித்ரமாயிருக்கிறதே! ஏன் மின்மினி தேவிக்குக் கொலை என்கிற பதத்தைக் கேட்ட உடனேயே இத் தகைய தடுமாற்றமும் நடுக்கமும் வரவேண்டும்? என்ற கேள்வி எல்லோருடைய மனத்திலும் ஓரே சமயத்தில் எழுந்து பல விதமான உணர்ச்சிகளைக் கொடுத்துக் குழப்பியது.

13

பாக்யத்தின் தத்தளிப்பைக் கண்ட அவள் கணவர் ''பாக்யம்! நீ உன் தாயன்பின் உன்னத நிலைமைக்கு ஏற்ப உன் மகனைச் சிறந்த ஸ்தானத்தில் பார்க்க ஆசைப்படுவது பிறவிக் குணத்தின் தன்மையாகும். இருப்பினும் நன்றி மறப்பது எத்தகைய பாதகம் என்பது நீ அறியாததில்லையே. நாகம் மாளின் உதவியை நாம் மறந்தால் கடவுள் நமக்கு எத்தகைய விபத்தைக் கொடுத்துவிடுவாரோ? நாராயணன் சொல்வது மிகவும் சரியான சத்யவாக்கு. உன்னைக் கேட்டதற்கு நீ சரி யானபடி நடந்துகொள்ளவில்லை என்று நாகம்மாளின் கண வன் நினைத்தால் என்ன செய்வது? நீ கட்டாயம் இதில் குழம்பாமல் போய்ச் சொல்லிவிட்டு வா'' என்று தனது குளறல் பாஷையில் சொன்னர்.

நாராயணன் எங்கே தடதடவென்று போய் முன்பின் யோசிக்காமல் சொல்லிவிடுவானே என்கிற பயத்தினல், பாவம்! தவித்தவாறு, பாக்யம் குழம்பி நின்ருள். நாராயணன் பேசத்தொடங்கி ''அம்மா! அமைதியை இழக்காதே. கடமை என்பதை எத்தனை திறமையுடன் பாரதத்தில் ஸகாதேவன் செய்து காட்டியிருக்கிருன். அதை நாம் மறக்கலாமா? தங்க ளுடன் எதிர்த்துப் போராடித் தங்களைத் தொலைப்பதற் காகவே பாரதயுத்தம் செய்ய நாள் பார்க்கும் நிபுணனை ஸகாதேவனிடம் துர்யோதனன் வந்து கேட்டபோதும் தன் கடமை தான் நாள் பார்த்துக் கொடுத்தே தீரவேண்டும்; அவன் எதிரியானலும்கூட அவன் தன் கலையில் பணியாற்றும் முறையிலும் கடமையைச் செய்யும் முறையிலும் பின் வாங் காமல் நாள்வைத்துக்கொடுக்கவில்லையா? அப்படிப்பட்ட மகா மேதைகளும் உத்தமர்களும் பிறந்துள்ள நம் நாட்டில் அவர் களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்கும் நாம் நமக்கு மகத்தான உபகாரத்தைச் செய்துள்ளவர்களுக்கு ப்ரதி உப காரம் செய்வற்கு இம்மாதிரி தயங்கியும் மயங்கியும் யோசனை

செய்வார்கள் உண்டாம்மா? கடவுள் இதைக் கண்டு வெறுக்க மாட்டாரா? அவருக்கு நாம் பொதுவாக நடக்காவிட்டால் கண் தெரிந்து வழி நடப்போமா? அத்தம்மாளின் குடும்பத்தினரின் மனத்தாங்கல் நம்மைச் சுற்றியடித்து வாட்டாதா? நீ நல்ல உயர்ந்த பெண்ணைக் கல்யாணம் செய்துவைத்தால் கூட அதற்கு ஏதாவது வ்யாதி வந்துவிட்டால் என்ன செய்வது? மனைவியை வைத்து வாழப்போகிறவன் நானல்லவாம்மா? அம்மா! நீ சொல்வதற்கு அஞ்சினால் நானே போய்ச் சொல்கிறேன்; நீ இரு" என்று படபடப்பாகக் கூறியவாறு நான்கடி எடுத்துவைத்தான்.

அதே சமயம் பாக்யலட்சுமிக்கு மிகவும் பழக்கமான நாகம்மாள் காட்டிக்கொடுத்த வீடுகளில் ஒரு வீட்டின் தலைவியான ஜானகியம்மாள் மிக்க ஸந்தோஷத்துடன் "பாக்யம் இருக்கிறாள்; நாராயணன்கூட இருக்கிறான்; வா மன்னி!" என்று தனது தமையனின் ஸம்ஸாரத்தையும் அழைத்துக்கொண்டு வந்து "பாக்யம்! சுபமான விஷயத்துடன் வந்திருக்கிறோம்... இவளைத்தான் உனக்குத் தெரியுமே, எங்கமன்னி ...என்ன பாக்யம்! முகம் ஏதோமாதிரி இருக்கிறது? என்ன உடம்பு?" என்று அங்கலாய்ப்புடன் கேட்டாள்.

பாக்யம் வெகு புத்திசாலியாகையால் மலர்ந்த முகத்துடன் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு "வாருங்கள் மாமீ! வாருங்கள் மன்னீ! உட்காருங்கள்! காலை முதல் தலைவலி. வேறொன்றுமில்லை. எல்லோரும் சவுக்யந்தானே; நீங்கள் எப்போது வந்தீர்கள் மன்னீ?' என்று குசலப்ரச்னம்செய்து அவர்களை உட்காரவைத்துவிட்டு "நாராயணா! நீ அவசரப்பட்டுக்கொண்டு போய்விடாதே; உன்னிஷ்டப்படியே நான் போய்ச் சொல்கிறேனப்பா...ஐட்ஜியாத்து மாமி வந்திருக்கிறார்கள், பார்த்தாயா இல்லையா? உனக்கு வேலை செய்து வைத்தவர்கள் இவர்கள்தான். நான் இவர்களுடன் பேசிவிட்டு வருகிறேன்...ஸ்வாமீ! இவனை உள்ளே இருக்கச் செய்யுங்கள்" என்று கூறிவிட்டு மறுபடியும் அங்கு வந்து "என்ன மன்னியம்மா! உங்களைப் பார்த்துத்தான் நிரம்ப நாளாகிவிட்டது. குழந்தைகள் எல்லாம் சவுக்யமா?" என்றாள்.

ஜானகி:—எல்லோரும் சவுக்யம். இப்போது முக்ய கார்யமாக உன்னிடம் வந்திருக்கிறோம். ஏதோ ஆதிமுதல் நீயும் நானும் ஒரே குடும்பத்துச் சகோதரிகள்போல் பழகி வருகிறோம். கடவுள் கிருபையினால் உத்யோகமும் நாராயணனுக்கு சீக்கிரத்திலேயே காயமாகிவிடும் என்று என் எஜமானர் சொல்கிறார். பையன் தங்கக்கட்டி என்பது எல்லோருக்கும் தெரியும். என் தமயனும் பெரிய வேலையிலிருக்கிறார் என்பது உனக்குத் தெரியுமே. அவர் பெண் மீனாவைத் தெரியாதா உனக்கு?

பாக்:—என் மாமி தெரியாது? வெகு சுருசுருப்பாய் ரதி போல லட்சணமாயிருப்பாளே! அவளுக்கென்ன கல்யாணமா, மாமி?

ஜானகி—ஆமாம் பாக்யம்! அவளுக்குக் கல்யாணத்தைப் பற்றித்தான் வந்திருக்கிறேம். அவளை நீ வெகு நாட்களாகப் பார்க்கவே இல்லையல்லவா? ஏதோ காலக்கொடுமையின் பலன், இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பு அந்தப் பெண் பிரம்புவேலை செய்கையில் அது எசகுபிசகாய் சடக்கென்று ஒரு கண்ணில் தாக்கி அதே காரணத்தினல் கண் போயே போய்விட்டது...

பாக்ய:—ஐயையோ! மீனுக்கா இந்த கதி? பிறகு!...

ஜான:—பிறகு என்னடியம்மா இருக்கிறது? அந்த கண்ணில் விகாரம் தெரியாமலிருப்பதற்காக ஆட்டுக்கண்ணை வைத்துவிட்டார்கள். கண்ணுடியும் அழகாகப் போட்டுக்கொண்டிருக்கிறாள். அவளுக்குள்ள புத்திசாலித்தனமோ, ஸாமர்த்யமோ சொல்லிமுடியாது. இந்த ஒருசிறிய ஓச்சத்திற்காகச் சரிக்குச் சரியான சம்பந்தம் செய்வது முடியவில்லை. இதோ பாரு, பாக்யம்! இதே ஊரில் ஒரு பெரிய மாடிவீடு; அதைத்தவிர அந்தப் பெண் உடம்பில் 5 ஆயிரத்துக்கு நகைகளும், ரொக்கம் 25 ஆயிரமும், இதோடு இந்தப்பெண்ணைநம்ம நாராயணனுக்குக் கொடுத்துவிடுவது என்று நாங்கள் தீர்மானம் செய்துவிட்டோம். இருக்கிற ஊனத்தை ஒளிக்காமல் சொல்லிவிடுவதே உத்தமம் என்று சொல்லிவிட்டோம். பார்ப்பதற்கு ஒன்றுமே ஊனம் தெரியாது. ஆதிமுதல் உனக்கும் நான் பலவிதத்தில் உதவியிருக்கிறேன். இச்சமயம் குறைந்தது 50 ஆயிரம் ரூபாயுடன் வரும் பெண்ணை உன்னுடைய நிலையையும் உத்தேசித்துச் செய்துகொண்டுவிடு. நீயும் சுகப்படலாம்; நாங்களும் சந்தோஷப்படலாம்... நீ செய்துள்ள உபகாரத்திற்கு இந்தப்ரதி உபகாரத்தைக் கேட்டுமுடித்துவை ...என்று என் தமயனுர் எழுதியிருக்கிறார். ஒரு கண் மிகவும் நன்றாகத் தெரிகிறது. ஊனம் என்று நாம் சொன்னால்தான் தெரியும். மற்றப்படி தெரியவே தெரியாது. பெண்ணையும் எங்காத்தில் அழைத்துவந்திருக்கிறேன்.

என்று ஒரே மூச்சில் தன் மனத்திலிருப்பதை எல்லாம் அள்ளிக்கொட்டிவிட்டாள். இதைக் கேட்கக்கேட்க பாக்யத்தின் தலை சுற்றுகிறது. ஏழ்மை நிலையை அடைந்திருக்கும் பையன் மகாமேதையாயிருப்பினும் அவனுக்குக் கடவுள் இத்தகைய சோதனைகளைக் காட்டியா அமைதியைப் பரீக்ஷிக்க வேண்டும்! இதென்ன அதிசய உலகம்! உதவிக்கு ப்ரதி உதவி என் சரீரத்தின் உழைப்பைப் பெறக்கூடாதா!"" என்று தனக்குள் எண்ணி ஒரேயடியாய்க் குழம்பிவிட்டாள். பதில் சொல்லக்கூடத் தெரியவில்லை.

இந்த அறைக்குப் பக்கத்தறையிலேயே உட்கார்ந்துள்ள தந்தைக்கும் மகனுக்கும் இவ்வார்த்தைகள் காதில் விழாமலில்லை. அவர்களையும் கலக்கித் தட்டாமாலையாடுவதுபோல் தலைசுற்றி இதயத்தில் வேதனை செய்து வாட்டுகிறது. "இதென்ன சோதனைகாலம். ஆபீஸில்ஒரு அமளி; நாகம்மாள் வீட்டில் ஒரு சீற்றம்...இங்கொரு சோதனையா?"...என்று நாராயணனின் உள்ளம் துடிக்கிறது.

பாக்யத்தின் தடுமாற்றத்தைக் கண்ட ஜானகியம்மாள் "பாக்யம்! இதோபாரு! உன் உள்ளம் குழம்புவதை முகமே எடுத்துக் காட்டுகிறது. நீ நன்றாக யோசித்துப்பாரு; ஆதி முதல் நீ பட்ட கஷ்டம் சொல்லிமுடியாது. நீ உன் வாழ்நாளில் 150 ரூபாயைச் சேர்ந்தாற்போல் உன் மகன் சம்பளத்தைப் பார்க்கவேண்டும். அதனால் நீ சந்தோஷமடைந்து மீனாவுக்கும் ஒருவழிபிறப்பிக்கவேண்டும் என்பதை நீரமாகயோசித்துத்தான் இந்த வேலையை என் தமயனின் பலமான சிபார்சுடன் நாராயணனுக்குச் செய்துவைத்தேன். ஏதோ! ஒரு கண் ஊனமானால் அதை நீ பொருட்படுத்தாதே 50 ஆயிரம் ரூபாய்க்குமேல் ஒரே சமயத்தில் உனக்குப் பணம் வருகிறது என்றால் அதை இழக்கலாமா? நீ எத்தனை காலம் கஷ்டப்பட்டாலும் 50 ஆயிரம் காலணாவைக்கூட பார்க்கமுடியாது. பாக்யம்! காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்என்பது பழமொழி. கைக்கெட்டிய கனியை விடாதே. பெண்ணும் ரதிபோலிருக்கிறாள் என்றுநீயே சொன்னாய். நன்றாகத்தீர்மானமாய் நீங்கள் மூவரும் சேர்ந்து யோசனைசெய்து நாளையதினம் சொல்லு போதும். உன் தரித்திரமும் வடிந்து உத்தமமான பெண்ணும் சொத்தும் சேர்ந்துவந்திருக்கையில் குறைவென்ன? நீங்கள் சொன்னாலன்றிக் கண்ணைப்பற்றிப் பிறருக்குத் தெரியாது. ஆகையால் தயங்காதே. என் தமயனும் இதை எண்ணித்தான் வேலை செய்துவைத்தானாம். அதைவெட்ட வெளிச்சமாய்ச்சொல்லிவிட்டான். அவன் மனம்போல் 'நடக்கவில்லை என்றால்வேலையைப்பற்றிப் பிறகு கனவுகூட காணவேண்டாம். அதையும் சொல்லிவிடுகிறேன்... நாங்கள் போய்வருகிறோம். யோசித்து நாளைக்குச் சொல்லு; நாளை பகல் வருகிறோம்" என்று கூறி இருவரும் சென்றுவிட்டார்கள்.

பாக்யத்தின் நிலைமையை என்னென்றுதான் வர்ணிக்க முடியும்? அவர்களிடம் சரியாகப் பேசியனுப்பவும் தெரியாமல் திக்ப்ரமைபிடித்தவள்போல் அப்படியே தம்பித்துப்போய் போகிறவர்களுக்கு வழியனுப்பச் செல்வதையும் மறந்து "கடவுளே! அரை ஊமைக் கணவனுடன் என்னுடைய சோதனையை நீ முடிக்காமல் நொண்டி குருடு இவைகளையும் என் குழந்தைக்குக் காட்டிச் சோதனைசெய்து வேடிக்கை பார்க்கிறாய். என்னிதயம் குமுறுகிறதே. ஆதியில் பட்ட

தரித்திரத்தின் கொடுமைகளும் நிராதரவான நிலைமையின் பரிபவத்தைக்கூட நான் எப்படியோ சமாளித்து ஜெயித்து விட்டேன். இந்த சோதனையிலிருந்து ஜெயிக்கமுடியாது போலிருக்கிறதே. இதை எப்படி என் கண்மணியிடம் சொல்வேன்?...நொண்டி...குருடு...ஐயோ!...நினைக்கவே முடியவில்லையே" என்று தனக்குள் எண்ணித் துவண்டு போனாள்.

14

துப்பறியும் வீரசிங்கம் என்றால் அறியாதவர்களே கிடையாது. போலீஸ்காரர்களில் சிலருக்குக்கூட நாயுடுவின் மீது பொறாமையுண்டு—இத்தனை வயதாகியும் இன்னமும் இவ்வளவு சாமர்த்தியமாய் உழைத்து ஜெயத்தைப் பெறுகிறாரே; நமக்கு அப்படிக் கிடைக்கவில்லையே...என்று எண்ணிச் சிலர் பொறாமை கொள்வதுண்டு. சிலர் இவருடைய உதவியுடன் தமது காரியத்தில் ஜெயமடைவதுண்டு.

சூர்யா பாங்கியின் முதலாளியின் கொலை விஷயத்தின் விசித்திரத்தை மட்டும் ஒருவராலும் கண்டுபிடிக்க முடியாத அத்தனை சிக்கல்முக்கலாக இருப்பதால் போலீஸ்காரர்கள் பாங்கியில் வேலையாயிருப்பவர்களில் யார்யார்மீது சந்தேகமோ, அவர்களை எல்லாம் கைதியாக்கினார்கள். பாங்கியில் பங்குதாரர்கள் சிலர்மீது சந்தேகித்து அவர்களையும் கைதுசெய்தார்கள். பாங்கியில் பணங் கட்டியுள்ளவர்களில் சிலர்மீது சந்தேகித்து அவர்களை ரகஸியமாய் விசாரணை செய்துவருகிறார்கள்.

முக்கியமாய் கைது செய்துள்ளவர்களில் பாங்கியின் பொக்கிஷம் வைத்துள்ள இரும்பு அறையின் குமாஸ்தாவையும் காஷ்கீபரையும் ஜாமீனில் விடுவதற்கு மறுத்து விட்டார்கள். ஒரு சிலரே ஜாமீனில் விடப்பட்டார்கள். காஷ்கீபர் கேசவன் மகா மேதாவி. வெகு கெட்டிக்காரர். நாணயஸ்தர். அவருடைய மனைவியான ஸாரதாம்பாள் B.A. பாஸ் செய்துள்ள பட்டதாரி; பெரிய குடும்பத்தில் நிறைந்த செல்வத்தில் பிறந்துள்ள மகா கெட்டிக்காரி. ஸாமர்த்தியசாலி. கணவனின் திறமைக்கு மேல்பட்ட திறமை வாய்ந்தவள். தன்னுடைய கணவனின் வேலைகளில்பாதிக்குமேல் ஸாரதாவே செய்துவிடுவாள். காஷ்கீபர் கேசவனிடமும் அவருடைய தர்ம பத்தினியினிடமும் பாங்கர் பராங்குசத்திற்கு அபாரமான மதிப்பும் ப்ரேமையும் உண்டு. கேசவனைத் தமது பாங்கியின் உத்தியோகஸ்தர் என்று நினைக்காமல் தன் குடும்பத்தில் ஒருவராகவே பாவித்துப் பழகிவந்தார். அதோடு ஸாரதாவின் சகலநடை உடை பாவனைகளும் இவருக்குப் பிடித்திருந்ததால், தமது ஒரே பெண்ணான ஜலஜாக்ஷியையும் இப்படியே சிறந்த

முறையில் பழக்கவேண்டுமென்று அவர் ஆசைப்பட்டு ஸாரதா வுடன் ஜலஜாவை நெருங்கிப் பழக்கிவைத்தார்.

பணம், படிப்பு, சம அந்தஸ்து, அழகு முதலிய சகல விதத்திலும் இருவருக்கும் பொருத்தமும் மதிப்பும் ஒன்றாக இருந்ததால் வெகு குஷியுடன் பழகிவந்தார்கள். வயதில் மட்டும் சற்று வித்யாஸம் உண்டு. ஆனால், வளர்ச்சியில் ஒன்றாகவே காணப்பட்டார்கள். தமக்குச் சரியான இடத்தில் தம் மகளை விவாகம் செய்துகொடுத்துத் தன் மருமகனிடம் பொறுப்பை ஒப்புவித்துத்தான் நிம்மதியாக இருக்க வேண்டும் என்று பாங்கர் மனப்பூர்வமாக எண்ணி வரன் தேடிக்கொண்டிருந்தார். அவருடைய சொந்த மாமன் மகனுக்கே விவாகத்தைச் செய்துவிட்டால் சொந்த உரிமையுடன் சகலத்தையும் நடத்துவான் என்பது பாங்கரின் எண்ணம். ஆனால், அவருடைய அபிப்பிராயத்திற்கு நேர் விரோதமாய் ஜலஜாவின் அபிப்ராயம் மாறுபட்டதாக இருந்தது. ஸாரதாவின் சகோதரனுக்குத் தான் வாழ்க்கைப்படுவதற்கே ஜலஜா விரும்பினாள். தாயற்ற பெண்ணானதால் இந்த விஷயத்தை நேராக எப்படித் தன் பிதாவிடம் தெரிவிப்பது என்ற லஜ்ஜையினால் அதைத் தெரிவிக்க சமயத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள்.

ஜலஜாவின் பிறந்த நாளை ஒவ்வொரு வருஷமும் பாங்கர் மிகச் சிறப்பாகக் கொண்டாடித் தம் சினேகிதர்களுக்கு விருந்து வைத்தும் கோயிலுக்குச் சென்று தான தருமங்கள் வழங்கி ஸ்வாமியை தரிசித்தும் வருவது வழக்கம். அன்றய தினம் பாங்கர் வீடு பெரிய கல்யாண வீடு போலவே இருக்கும். அச்சமயத்தில் வருகிற பல பெரிய மனிதர்கள் கண்களை ஜலஜாவின் ரூபம், பணம், அந்தஸ்து முதலிய சகலமும் கொள்ளைகொள்ளும். விவாகம் செய்துகொள்ளச் சிலருடைய உள்ளம் தாவித் திரியும். ஆனால், ஒன்றுக்கும் பலன் கிடைக் காமற் போய்விடும்.

இந்த ரகஸ்யங்கள் ஜலஜா அறியமாட்டாள். அவள் பிறந்தினக் கொண்டாட்டத்தை இம்முறை மிகச் சிறப்பாகச் செய்துவிடவேணும். அடுத்த பிறந்தினக் கொண்டாட் டத்தின்போது விவாகமாகிவிடும். ஆகையால், இம்முறை தமது இஷ்டம்போல் செய்துமகிழ பாங்கர் எண்ணி திட்ட மிட்டார். மகாயோக்யரும் தர்மசிந்தை உள்ளவருமான பாங்க ருக்கு மன உறுதி மட்டும் கிடையாது... அல்ப விஷயங்களில் ப்ரவேசித்து மனத்தை-தனத்தை-இழப்பதில் மட்டும் கட்டுப் படுத்த சக்தியற்ற ஊனம் ஒன்று அவரிடம் இருப்பதை அவ ருடைய ஆப்தர்கள் சிலர் வெறுத்துவந்தார்கள். ஆனால், நேருக்குநேர் கேட்க அச்சப்பட்டார்கள். அது அவருடைய

சொந்த விஷயம் ; அதில் தலையிட்டால் மதிப்பாயிருக்காது... என்று எண்ணினார்கள்.

அன்று பிறந்ததினக் கொண்டாட்டத்திற்கு ஆயிரக் கணக்கானவர்கள் தவறாது வந்து விருந்துண்டு மகிழ்ந்து கச்சேரி முதலிய கேளிக்கைகளில் ஈடுபட்டுப் பின் விடை பெற்றுச் சென்றார்கள். பாங்கர் கோயிலுக்கு மகளையும் காஷ்யபர், ஸாரதா இருவரையும் அழைத்துச் சென்று ஆனந்தமாய் ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டு இரவு வெகு சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருந்து பின் தன் தனி விடுதிக்குச் சென்றவரைப் பிறகு உயிருடன் காணவில்லை! அதி காலையில் தினம் எழுந்துவரும் பாங்கர் வாராததால் முதல் நாளைய அலுப்பினால் தூங்குவதாக எண்ணினார்கள். இரவு கேசவனும் ஸாரதாவும் இங்கேயே தங்கி மறுதினம் அதி காலையில் ஜலஜாவிடம் அப்பா எழுந்ததும் சொல்லி விடும்படிச் சொல்லிவிட்டு, அவளிடம் விடைபெற்றுச் சென்றனர்.

மணி 8 அடித்துவிட்டதால் ஒருவேளை உடம்புக்கு ஏதாவது அஸௌக்யமாயிருக்குமோ? என்று பயந்தவாறு ஜலஜாவே தகப்பனார் விடுதிக்குச் சென்று கதவை இடித்தாள். ப்ரதி தினமும் அவர் கதவை உள் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டுதான் படுப்பது வழக்கம். அதற்கு விரோதமாய் கதவில் கை வைத்த உடனே சடக்கென்று திறந்துகொண்டது கண்ட ஜலஜா அப்பா ஏன் இன்னும் தூங்குகிறார்? என்று எண்ணியபடியே "அப்பா! மணி எட்டடித்து விட்டதே! கதவை ஏன் இரவு தாளிடவில்லை! எழுந்திருங்கள்" என்று சொல்லிக்கொண்டே சமீபத்தில் சென்றாள்.

அவ்வளவுதான்! எரிமலையே தலையில் விழுந்துவிட்டது போல் 'ஹா!'...என்று ஒரு பெரிய சத்தமிட்டு அலறிக் கீழே விழுந்துவிட்டாள்! இவளுடைய கூச்சலைக் கேட்டு வேலைக்காரர்கள் குமாஸ்தா முதலியவர்கள் ஓடிவந்து பார்க்கையில், பாங்கர் ரத்தத்தில் மிதந்து பிணமாய்க்கிடக்கும் கோராமையைக் கண்டு எல்லோரும் ஒரேயடியாகக் கூக்குரலிட்டார்கள்.

அவ்வளவுதான்! இனி கேட்கவேண்டுமோ? கேசவனுக்கும் ஸாரதாவுக்கும் விஷயத்தை அறிவிக்க போன் பறந்தது. ஆனால், அவர்கள் வேறொரு சொந்தக்காரர்கள் வீட்டுக் கல்யாணத்திற்குச் சென்றுவிட்டதால் வீட்டிலில்லை. போலீஸும் பாங்கைச் சேர்ந்த மற்றவர்களும் கூட்டங் கூடி விட்டனர். சட்டப்படி விசாரணைகள் தொடங்கி நடத்தித் தமக்குச்சந்தேகமாகத் தோன்றியவர்களை எல்லாம் கைது செய்தார்கள். தன்னந்தனியாய்க் கதறும் ஜலஜாவை அவளுடைய பந்துக்கள் கட்டிக் காக்க முன்வந்தார்கள். முன் கூறியதுபோல் பலரைக் கைதியாக்கிய முறையில் காஷ்யபரை

யும் கைதியாக்கிவிட்டார்கள். ஸாரதாவும் ஜலஜாவும் அன்யோன்யமான நேசிகளாகையால் ஜலஜா அவர்மீது தனக்குச் சந்தேகமே இல்லை என்று எத்தனை கூறியும் பாங்கியின் பங்குதாரர்களில் பெரும்பாலோர் காஷ்கீபர் இரவு தங்கியதையும் அதிகாலையில் வெளியே சென்றுவிட்டதையும், இரவு கேசவன் தனித்து பாங்கருடன் பேசியதை வேலைக்காரர் கூறியதையும் ஒன்றுக்கொன்று ஜோடித்து அவர்மீது சந்தேகித்ததால் அவரைக் கைதியாக்கிவிட்டார்கள்.

ஸாரதாவுக்குத் தாங்கமாட்டாத ஆத்திரமும் விசனமும் பொங்கியதில் இரண்டு நாட்கள் எழுந்திருக்காமல் மயக்கம் போட்டுவிட்டாள். பிறகு தன்னைத்தானே சமாளித்துக் கொண்டு, தன் கணவன் நிரபராதி, அவரை எப்படியாவது விடுதலை செய்து ஜெயத்தை நிலைநாட்ட வேண்டும்....என்று துப்பறியும் நாயுடுவிடம் காலில் விழுந்துகெஞ்சினுள்.

தன் கணவன்மீது அபாண்டமான குற்றத்தைச் சாட்டுவதற்கு ஜலஜாவும் உடந்தையாயிருந்தாளோ! என்றெண்ணி அவளிடம் திடீரென்று வெறுப்பும் த்வேஷ மனப்பான்மையும் கொண்டு ஒதுங்கினுள். ஸாரதா நாயுடுவிடம் சென்றது தெரியாதஜலஜா, நாயுடுவிடம் தான்வேறு சென்று உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடித்து ஸாரதாவின் மனக் குறையைத் தீர்க்கவேண்டும்என்றுவேண்டிக்கொண்டாள். நாயுடு இருவருக்கும் தன்னுலானதைச் செய்வதாக வாக்களித்தார்.

கொலை நடந்து இரண்டு மாதங்களாகிவிட்டன. ஆனல், ஒருவிதமான தகவலும் போலீஸாருக்குத் தெரியவில்லை. ரகஸியமாய் வேலை செய்யும் நாயுடுவுக்குத்தான் வெற்றி கிடைத்துவிடுமோ என்ற பொருமைதான் தோன்றியது. பாங்கருக்குத் துப்பாக்கி லைஸன்ஸ் உண்டு. அவருடைய கைத் துப்பாக்கியைக்கூட களவாடிக்கொண்டு போயிருப்பது தான் அதிசயத்திலும் அதிசயமாக இருந்தது! பாங்கர் விடுதி தனிமையாய் இருப்பதால் அங்கு நடக்கும் எந்தச் சம்பவமும் வெளியில் தெரியாது. அதற்காகவே தனக்குத் தனி விடுதி அமைத்துக்கொண்டார். பாங்கருக்குத் துப்பாக்கி இருப்பது, அவர் தனி விடுதியிலிருப்பது, அவர் தனது சொந்தப் பணத்தில் தனது இஷ்டப்படி செலவழிக்க எப்போதும் ஆயிரக் கணக்கில் பணத்தைக் கைவசமே வைத்திருப்பது, முதலிய சகலமான உளவும் தெரிந்தவர் காஷியர் ஒருவர்தான் என்பது எல்லோருக்கும் தெரியும். அன்று விருந்துக்காக செலவுபோக மிச்சப் பணம், ஏற்கெனவே உள்ள பணத்துடன் சுமார் 15 ஆயிரம் ரூபாய்கள் அவருடைய கைப் பெட்டியில் வைத்திருப்பதை பாங்கரின் தினக் குறிப்பு டைரியில் எழுதியிருக்கிறார். அதோடு சில நகைகளும் இருப்பதாகவும் டைரியில் குறித்திருக்கிறார். இரும்புக் கைப் பெட்டியில் காலணு இல்லை. நகைகளும் இல்லை. சில முக்ய மான பத்திரங்கள், கடிதங்கள் முதலியவைகள் சிதறிக் கிடந்தன. இவைகளிலிருந்து உளவறிந்தவர்கள் செய்தது தான் இந்தக் கொலை என்று தீர்மானித்தார்கள். பலமான சந்தேகம் பூராவும் காஷியர்மீதுதான் தாவியது. பொதுமக்களின் உள்ளங்களும் அப்படியே எண்ணின. அதற்கேற்றவாரே போலீஸாரின் வேலையும் நடந்துவந்தது.

என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

எங்கள் வடஇந்திய சுற்றுப்பிரயாணம்.

தகப்பனுர், பாலம், சாவித்திரி, காந்தாமணி, நான் ஐவரும் உதவிக்கு சிவா என்பவனுடன் ஆகஸ்ட் 20-ஆந் தேதி புறப்பட்டு முதலில் விசாகப்பட்டணத்துக்குப் போனேம். அங்கு ஜில்லா ஸப் ஜட்ஜாயிருந்த ஸ்ரீமான் வெங்கட்ராமையா வீட்டில் தங்கி இரண்டு நாளிருந்து கடல்கரை, ஹார்பர் கவர்மெண்ட் பாடசாலே, ஹாஸ்டல், என்னுடன் காலேஜில் படித்து கவர்மெண்ட் ஆஸ்பத்திரி தலைவியாயிருந்த டாக்டர் லாஸரஸ், மற்று தெரிந்தவர்களைப் பார்த்துக்கொண்டு 23-ஆந் தேதி கல்கத்தா சேர்ந்தோம். எங்களை அழைத்துப் போவதற்கு ஸர். ஸி. வி. ராமன் அவர்களும், தகப்பனுரின் தம்பி புதல்வன், வெங்கட்ராமனும் ஸ்டேஷனுக்கு வந்திருந்தார்கள். 5 நாட்கள் கல்கத்தாவில் தங்கினேம். பிரதி தினமும் காலையில் ஆகாரத்தை முடித்துக் கொண்டு சுமார் 10 மணிக்குப் புறப்பட்டு மாலை 7 மணிவரைக்கும், கல்கத்தாவிலுள்ள முக்கியமான இடங்கள் யாவும் பார்த்தோம். மியூஸியம், Botanical தோட்டம், விக்டோரியா மெமோரியல், ஜைனர் கோவில், மல்லிக் அரண்மனை, ந்யூ மார்கெட் இவை முக்கியமானவை.

கல்கத்தாவிலிருந்து கயாவுக்குப் போய் ஒருநாளிருந்து விட்டுப் பிறகு காசியில் 2 நாள் தங்கினேம். (1906-ஆம் வருஷம் எங்கள் வடஇந்திய பிரயாணத்தில் காசி, கயை இவற்றைப்பற்றி விவரம் எழுதியிருப்பதால் இங்கு அதிகம் விவரிக்கவில்லை) காசியில் ஹிந்து யூனிவர்ஸிடி ஆரம்பித்து நடந்துகொண்டிருந்தது. மாளவியாஜீயின் முயற்சியில் லக்ஷக்கணக்காக நிதி வசூலிக்கப்பட்டு சில கட்டிடங்கள் கட்டிமுடிந்திருந்தன. ரஸ்தாக்கள் ஒழுங்காக அமைக்கப்பட்டு இரு பக்கங்களிலும் விருக்ஷங்கள் வைக்கப்பட்டு வளர்ந்துகொண்டிருந்தன. அந்த இடமே ஒரு தனி நகரம்போல் காட்சியளித்தது. இப்போது இன்னும் பிரபலமாக வளர்ந்து அநேகம் துறைகளில் கலைகள் அபிவ்ருத்தியாகியிருக்கிறது. அப்போது ப்ரம்மஞானசபையைச் சேர்ந்த உயர்தரப்பாடசாலைகள் ஆண்களுக்கொன்றும் பெண்களுக்கொன்றும். ஒரு அழகிய தியஸாபிகல் புஸ்தகசாலை யொன்றும் இருந்தன, பெனகால் ஸ்ரீ ஸஞ்சீவி ராவ் அவர்களும் அவரது தர்ம பத்தினி ஸ்ரீமதி பத்மாபாயும் பாடசாலைகளின் தலைவர்களாயிருந்தனர். அவர்கள் உதவியில், பாடசாலைகள், ஹிந்து யூனிவர்ஸிடி எல்லாம் பார்த்துவந்தோம்.

தசாச்வமேதகட்டத்தின் சமீபத்தில் ஸ்ரீமான் சிந்தாமணி அவர்களின் பந்துவாகிய ஸ்ரீமதி துவாரகா வெங்கடலக்ஷ்மி அம்மாள் வீட்டு இரண்டாவது மாடியில் சௌகரியமாகத் தங்கி

இருந்தோம். பிறகு செப்டம்பர் 2-ஆந் தேதி புறப்பட்டு அலஹாபாத்துக்குப் போனோம்.

அலஹாபாத்தில் கண்டோன்மெண்டில் தெரிந்தவர் ஒருவர் வீட்டில் 2 நாளிருந்து திரிவேணியில் ஸ்நானம் செய்துவிட்டு செப்டம்பர் 6-ஆந் தேதி ஹரித்வார் போய்ச்சேர்ந்தோம். கங்கைக் கரையில் "Sarbanath Mandir" என்னும் ஒரு வீட்டு மாடியில் 2 அறைகள் வாடகைக்கு எடுத்துக்கொண்டு தங்கினோம். கங்கா தேவி ஹிமோத்கிரியிலிருந்து சமதரைக்கு இறங்கும் இடம் ஹரித்வாரம். பகல் 12 மணிக்கு வெயில் கடுமையாயிருக்கும் போதுகூட நதி ஜலம் ஐஸ்மாதிரி குளிர்ச்சியாயிருக்கும். கங்கையின் ஒரு முக்கிய படித்துரையின் பக்கத்தில் ஒருசிறு கோபுரத்துடன் கூடிய கோவில், கங்கையம்மனுக்கு. இங்கு கங்காமாதாஜீக்குத்தான் பூஜை தீபாராதனை யெல்லாம். மாலை 6 மணிக்கு தீபாராதனை. அந்த சமயம் சூரிய அஸ்தமனம். மேற்குப்பக்கம் ஆகாயம் ரொம்ப நேரம் வரைக்கும் பல நிறங்களுடன் கூடிய ஸந்தி (இரவும் பகலும் ஸந்திக்கும் நேரம்) வெளிச்சம் (twilight) நிரம்பி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

இந்தியாவின் 8 திசைகள் (அல்லது 16 திசைகள், எல்லா திசைகள் என்பது பொருந்தும்) பலபாகங்களிலிருந்தும் யாத்திரிகர்கள் நூற்றுக்கணக்கில் வந்துபோய்க்கொண்டிருப்பார்கள். ஹிந்து மதத்தில் க்ஷேத்திர யாத்திரை, தீர்த்த ஸ்நானம், மூர்த்தி தரிசனம் இவற்றின் அவசியத்தால் இந்தியாவின் பலபாகத்திலுள்ளவர்கள் காசி முதல் ராமேச்வரம்வரையுள்ள பெரிய க்ஷேத்திரங்களில் வந்து சந்திப்பதற்கும் நாம் எல்லாரும் ஒரே தேசத்தினர், ஒரே மதத்தினர் என்னும் ஒற்றுமையை உணர்வதற்கும் எத்தனை வசதியாயிருக்கிறது. பெரியவர்கள் வகுத்த இந்த ஏற்பாடு, நாம் பல இடங்களைப் பார்ப்பதற்கும், மலைகள் மேல் கட்டியுள்ள கோவில்களை தரிசிக்கும்போது மலைக்காட்சிகள், மலையருவிகளில் ஸ்நானம் எல்லாம் தேக ஆரோக்கியத்தின் அபிவிருத்திக்கும் தகுந்த வாய்ப்புக்கள் ஆகும். நாங்கள் ஹரித்துவாரத்தில் இருந்தபோது இந்தஎண்ணங்கள் யாவும் என் மனதில் உண்டாகி இந்திய தேசத்தைப்பற்றியும் பெரியவர்களின் ஆழ்ந்த ஆலோசனையுடன் கூடிய ஏற்பாடுகளையும்பற்றி பெருமித மடைந்தேனாயினும் ஒரு குறையை—அதுவும் மிக முக்கியமான ஒரு குறையை—உணராமலிருக்க முடியவில்லை. இந்தியாவில் பல பாகங்களிலிருந்தும் எத்தனையோ பணச்செலவு செய்துகொண்டு கங்கை மாதாஜீயின் கரையில் கூட்டங்கூட்டமாகக் கூடியிருந்த நாங்கள் எங்கள் அபிப்பிராயங்களையும் உணர்ச்சிகளையும் ஒருவரோடு ஒருவர் கலந்து பேசிக்கொள்வதற்கு வேண்டிய பாஷையில்லாத குறையை மிகுதியாக உணர்ந்தோம். ஒருவரையொருவர் சிரித்த முகத்துடன் பார்த்துக்கொண்டு ஏதோ ஜாடைகாட்டி மூங்கை பாஷையில் ஒன்றிரண்டு விஷயங்களைத்தான் தெரிந்து கொள்ளமுடியும்.

இந்தியாவில் ஒற்றுமையை வளர்ப்பதற்கு, இந்திய ஜனங்களுக்கு ஒரு பொதுவான தேச பாஷை அவசியமென்பதை தீர்க்கதரிசியாகிய நமது தேசபிதா மகாத்மா காந்திஜீ அவர்கள் உணர்ந்து, இந்தியாவின் முன்னேற்றத்துக்காக அவர் வகுத்த

நிர்மாண திட்டங்களில், ஹிந்திபாஷையை நமது தேச பாஷையாக எல்லாரும் கற்றுக்கொள்ளவேண்டும் என்பதை வற்புறுத்தியிருப்பதன் அவசியத்தை எல்லாரும் உணர்ந்து அந்தப்பாஷையைப் பேசவும் படிக்கவும் தெரிந்துகொள்ளவேண்டியது மிகமிக அவசியம்.

பிற்பகல் 3 மணியிலிருந்தே, வங்காளி, பஞ்சாபி, குஜராத்தி, மராத்தி, காஷ்மீரி, தென்தேச 4 பாஷையினர் ஆண் பெண் குழந்தைகள் பலரும் அவரவரது தேசஜாதி வழக்கப்படி ஆடம்பரமான அழகிய உடை அலங்காரங்களுடன், நதிக்கரையில் நெடுந்தூரம் வரைக்கும் கட்டப்பட்டுள்ள அகன்ற கல் தரைகளில் ஒய்யாரமாக உலவிக்கொண்டும், ஆங்காங்கு உட்கார்ந்து பேசிக்கொண்டும், பாடிக்கொண்டும், பஜனை செய்துகொண்டும், புராண உபந்நியாசங்கள் செய்துகொண்டும் இருப்பார்கள். அந்த ஊரில் மலையடிவாரத்திலிருந்து அபரிமிதமான ரோஜாப் புஷ்பங்களைக் கொண்டுவந்து அவற்றைப் பெரிதும் சிறிதுமான ஆலிலைபோன்ற தடிப்பான இலைகளால் தைக்கப்பட்ட தொன்னை போன்ற குழிவான தட்டங்களில் அலங்காரமாக வைத்து அவற்றின் இடையிடையே இலை அகல்களில் நெய்த்திரிகள் வைத்து விற்பார்கள். யாத்திரீகர்கள், 2 அணா முதல் 2 ரூபாய் வரையுள்ள இந்த புஷ்பாலங்கார தீபத்தட்டுக்களை கையிலேந்திக் கொண்டு, 6 மணி சுமாருக்கு கங்கைத்தாயாருக்கு தீபாராதனையானவுடன், புஷ்பத்தட்டிலுள்ள தீபங்களை யேற்றி, ''கங்கா மாதாஜீக்கு ஜே'' என்னும் கோஷத்துடன் கங்கை பிரவாகத்தில் விடுவார்கள். நூற்றுக்கணக்கான புஷ்பத்தட்டுக்கள் தீபங்களுடன் பிரவாகத்தில் மிதந்துபோவது எத்தனை அழகான காட்சி! யாருடைய தட்டுக்கள் கவிழ்ந்து போகாமல் தீபங்கள் அணைந்துவிடாமல் அதிகதூரம் போகின்றன என்றும் போட்டி!

காலையிலிருந்து பகல், ஒன்றிரண்டு மணிவரைக்கும் ஏழைகளுக்கு பணக்கார யாத்திரிகர்கள் அன்னமளிப்பார்கள். அன்னமென்றால் அரிசி யன்னமா, இல்லை. கோதுமை மாவினால் செய்த பெரிய பருமனான ரொட்டிகளும் உருளைக்கிழங்கு கூட்டும். வட இந்தியர்களின் முக்கியமான ஆகாரம் இவையே. கங்கைக்கரையோரமாக வரிசையாக யாத்திரிகர்கள் தங்குவதற்கு மாடிவீடுகள். 2. 3 வீடுகளுக்குப் பொதுவாக ஐந்தாறு அறைகளுடன் கூடிய மறைவிடங்கள். ஒவ்வொன்றின் பக்கத்திலும் ஒருதோட்டி யிருந்து கொண்டு யார் உள்ளே போய்விட்டுவந்தாலும் உடனே போய் சுத்தம் செய்துவருவான். ஒவ்வொரு தடவையும் 1 அணா அவனுக்குக் கொடுத்துவிடவேண்டியது மாமூல். எங்களுடன் சகாயத்துக்கு வந்த சிவாவுக்கு அங்கிருந்த 4 நாட்களில் 2 நாள் வயிற்றுப்போக்கு; 2,3 மணிகளுக்கு ஒரு முறை போவதும், தோட்டிக்கு ஒரு அணா கொடுக்கவேண்டி வந்ததும் தமாஷாயிருந்தது. ஆனமட்டும் தோட்டியின் கண்ணில் படாமல் தப்பித்துக் கொள்ளப்பார்ப்பான். ஆனால், அவனை ஒவ்வொருதடவையும் ஏமாற்றமுடியவில்லை !!

காலைமுதல் மாலைவரைக்கும் ஜனங்கள்நதியில்ஸ்நானம்செய்து கொண்டிருக்கும் காட்சி, பல இடங்களிலிருந்து வந்துள்ள அவர்களது வழக்கபழக்கங்கள், அவர்களது உடைகள் ஆபரணங்கள்

எல்லாம் நமக்கு விசித்திரமாயிருக்கும். கையில் அடுக்கடுக்காக தோளிலிருந்து கணுக்கைவரையில் பருமன் பருமனாய் வெள்ளி, தங்கம், மாட்டுக்கொம்பு இவைகளால் செய்த வளையல்கள், பலவித மோதிரங்கள், காலில் வெள்ளிக்கம்பியை 20 30 தடவை வளைத்துள்ள ஆபரணம், காப்பு,கொலுஸு, பாதஸரம்இத்தியாதி. காதிலும் கழுத்திலும் மூக்கிலும் பலவித விசித்திரமான ஆபரணங்கள், தலையாபரணங்கள் பலவிதம் இத்தியாதி. வடஇந்தியாவில் கோஷாவழக்கம் அதிகம். தலையையும் முகத்தையும் புடவைத் தலைப்பினால் மூடிக்கொண்டிருப்பார்கள். ஆகவே, ஸ்நானம் செய்துவிட்டு கரையேறி புடவை கட்டிக்கொள்ளும் போது தலையைத்தான் முதலில் மூடிக்கொள்வார்கள். தலையை மூடிக்கொள்ளும் அவசரத்தில் சரீரத்தின் மற்ற பாகங்கள் தெரிந்தால்கூடப் பரவாயில்லை !!

செப்டம்பர் 9-ஆந் தேதி பிற்பகல் அங்கிருந்து புறப்பட்டு, அம்பாலா, கால்கா என்னுமிடங்களில் ரயில்மாறி 10-ஆந் தேதி காலை ஸிம்லா போய்ச்சேர்ந்தோம். நக்ஷத்திர ஆபீஸில் வேலையாயிருந்த ஸ்ரீமான் M. G. சுப்ரமணிய அய்யர் ஸ்டேஷனுக்கு வந்து எங்களை அழைத்துப்போனார். நம் பக்கத்துக் கூலிகள் ஒன்றிரண்டு பெரியபெட்டிகள் படுக்கைகளை தலையில் சுமந்துகொண்டு சமதரையில் நடப்பதற்கே சிரமப்படுவார்கள். கோதுமையாகாரம் உண்டு மலைப்பிரதேசத்து சம சீதோஷ்ண நிலைமையில் வசிக்கும் அவ்விடத்துக் கூலிகள் நல்ல பலிஷ்டர்கள். அடிமுதுகிலிருந்து தலைக்குமேல்வரைக்கும் பெட்டி படுக்கைகளை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிக்கட்டி, சுமந்துகொண்டு, ஸ்டேஷன்பக்கத்திலிருந்த ஒரு மலையிறக்கத்தி லிறங்கி எதிரில் ஒரு மலையேற்றத்தில் ஏறி குறுக்குவழியாக அனாயாசமாகப் போய்விட்டார்கள். நாங்கள் அந்தப் பள்ளத்தாக்கில் சுற்றியுள்ள, சற்று ஏற்றமான ரஸ்தாவழியாக நடந்தே சமீபத்திலேயேயிருந்த அவரது வீட்டுக்குப்போனோம். மேலும் அந்தக் காலத்தில் மலைப்பிரதேச ஊர்களில் வண்டிகள் அதிகமாகக் கிடையாது. நடந்தேதான் அநேகம் இடங்களுக்குப் போகவேண்டும். அந்தக்காலத்திலேயே நமது மதராஸிகள் அநேகம் பேர் அங்கு வேலையிலிருந்தனர். எங்களுக்குத்தெரிந்த சிலரைப் பார்த்துவந்தோம். நமது நீலகிரி, கொடைக்கானலைப்போல, ஸிம்லாவும் ஒரு மலை நகர். சென்னை ராஜதானி கவர்னரும், ராஜாங்க அலுவல்களும் கோடை மாதங்களில் உதக மண்டலத்தில் நடப்பதுபோல, மத்திய அரசாங்க அலுவல்கள் ஸிம்லாவில் வருஷத்தில் 6 மாதம் நடைபெறும். கவர்னர் ஜனரல் அந்த 6 மாதமும் அங்கு வசிப்பார். பனிக்காலத்தில் ஸிம்லாவில் தெருக்களில்ஐஸ்—பனி மழைபெய்து தெருக்கள் வீட்டுக்கூரைகள் விருக்ஷங்கள் யாவும் வெளிர் நிறமாயிருக்கும். அடுக்கடுக்கான மலைகள் யாவும் ஸிம்லாவைச் சுற்றிலும் (ஹிமம்) பனியினால் மூடப்பட்டிருக்கும்.

ஸிம்லாவில் 3 நாட்கள் இருந்தோம். என் சகோதரி சாவித்திரி தன் கணவர், முதல் மகா யுத்தத்தில் சரியான ஆகாரமில்லாதகாரணத்தால் ஏற்பட்ட ஒரு கோளாறினால் காலமானதாலும், 4 குழந்தைகளைக் காப்பாற்றிப் படிப்பிக்கவேண்டுமாதலாலும் ஒரு மிலிடரி பென்ஷனுக்கு அப்ளிகேஷன் போட்டிருந்தாள். அது

சம்பந்தமாக, ஒரு தலைமை உத்தியோகஸ்தராகிய Mr. Currie Evans என்பவரை சாவித்திரியும் நானும் போய்ப் பார்த்தோம். மிகுந்த அன்பு அபிமானத்துடன் பேசி, அவரும் இன்னும் ஒன்றிரண்டு பெரியவர்களுடைய சிபார்சில் அவளுக்கு ஒரு பென்ஷன் தொகை கிடைத்தது.

13-ஆந் தேதி காலை டில்லி போய்ச்சேர்ந்தோம். அங்கு அக்கௌண்டெண்ட் ஜெனரலாயிருந்த ஸ்ரீமான் T. S. அய்யர் என்பவர் ஸ்டேஷனுக்கு வந்து எங்களை அவர் இல்லத்துக்கு அழைத்துச்சென்றார். அங்கு 4 நாட்களிருந்தோம். புது டில்லி (டில்லியா, தில்லியா ?) அப்பத்தான் ஆரம்பித்து சில வருஷங்கள் ஆகியிருந்தது. அகலமான ரஸ்தாக்களும் புதிய கட்டிடங்களும், பெரிய உத்தியோகஸ்தலங்கள், வியாபார விடுதிகள், குடியிருப்பு பங்களாக்கள், ஷாப்புக்கள் இத்தியாதி. இடையிடையே பார்க்குகள் என்னும் உத்தியான வனங்கள். அங்கு பழையதில்லியில், முகம்மதியர்கள் ஆண்டகாலத்தில் கட்டப்பட்ட அழகிய சில இடங்கள் பார்க்கத்தகுந்தவை. அவைகள் சிலவற்றையெல்லாம் பார்த்தோம். அந்தக் காலத்தில் அந்தப் பக்கங்களில் புளி கிடைக்காது. மாதுளையில் புளிப்பு ஜாதி யொன்று. அவற்றை வாங்கி, உள்ளேயிருக்கும் முத்துக்களை வெந்நீரில் ஊறவைத்துக் கசக்கி அந்த ரஸத்தை குழம்பு ரசத்துக்குச்சேர்த்து புளிப்பையுண்டாக்கவேண்டும். காப்பிக்கொட்டை கிடையாது. டீ தான் யாவரும் சாப்பிடுவது.

புதுதில்லியில் லேடி ஹார்டிஞ்சு மெடிகல் காலேஜில் காந்தாமணியை விட்டுவிட்டு, மற்ற நாங்கள் செப்டம்பர் 17-ஆந் தேதி புறப்பட்டு மறுநாள் லாகூர் போய்ச்சேர்ந்து அங்கு ஸ்ரீமான் B. N. S. அய்யர் கிரகத்தில் தங்கினோம். (தொடரும்)

வை. மு. கோ. நாவல்கள். (தற்போது கைவசமுள்ளவை)

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)

ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (கிளேஸ்)
மலர்ந்த இதழ்

ரூ. 2-4
தயாநிதி
ஞானதீபம்
வாழ்க்கைத் தோட்டம்

ரூ. 2.
வானக்குயில்
ஆத்ம சக்தி
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
மதுர கீதம்
அமுதமொழி (சாதா)
ஆசைப்ரவாகம்
வெளுத்த வானம்
மனத்தாமரை
அமரத்யாகி
ஜீவநாடி
பாதாஞ்சலி

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
இதய ஒலி
சிலாசாசனம்
வீராங்கனை

ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
இசைப்புயல்
காலக்கண்ணாடி
ஜயபேரிகை

ரூ. 1-4
கோபால ரத்னம்
மகிழ்ச்சி உதயம்
புதுமைக்கோயில்
க்ருபாமந்திர்

ரூ. 1-2
படகோட்டி
அபராதி

ரூ. 1.
வீரவஸந்தா
நளினசேகரன்
மாலதி
வத்ஸகுமார்
பிரதிக்ஞை
ப்ரார்த்தனை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

அணா. 12.
பக்ஷமாலிகா
சுடர்விளக்கு
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி

அணா. 8
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்

அணா. 6.
உருத்த இதயம்

மகாத்மாஜி ஸேவா சங்கம்

திருவல்லிக்கேணி.

சங்கத்து அபிமானிகளுக்கு!

பேப்பர் பஞ்ச காரணமாய் மோகினியில் அதிக இடமில்லாது போனதால் சங்கத்தைப் பற்றிய விவரங்களை சில மாதமாகத் தொடர்ந்து விரிவாக ப்ரசுரிக்க இயலாதுபோயிற்று. மூன்று மாத காலத்திய நிகழ்ச்சிகளைச் சுருக்கமாகக் கொடுக்கிறேன்.

1—12—50 "ஆடம்பர வாழ்க்கை அவசியமா? எளிய வாழ்க்கை அவச்யமா? என்கிறவிஷயம் விவாதிக்கப்பட்டது.

8—12—50 பெங்களூர் ஸ்ரீமதி நிர்மலாதேவி வாய்ப்பாட்டும், சுபத்திரா பிடிலும், M. P. நாகராஜராவ் கடமும், வேதகிரி ராவ் கஞ்சிராவும் சேர்ந்த இசைவிருந்து ப்ரமாதமாய் நடந்தது.

14—12—50 அடைக்கலப்பத்து சாத்துமுறை ஸ்ரீ பண்டிததிருவாலி ராமாநுஜாசாரியரால் சிறப்பாக நடந்தது.

16—12—50 சங்கத்தில் பண்டித திருவாலி ராமாநுஜாசார்யரால் திருப்பாவை உபன்யாஸம் ஆரம்பிக்கப்பட்டது.

17—12—50 தேசத்தின் மகத்தான தலைவராயும், மகாத்மாவின் வலதுகையாயுமிருந்த ஸ்ரீவல்லபாய்பட்டேலின் மரணத்தைக் குறித்து அனுதாபக்கூட்டம் நடந்தது.

20—12—50 வைகுண்டஏகாதசி பஜனை மிகச்சிறப்பாக நடந்தது; பக்தி விஷயமாகச் சிலர் பேசினார்கள்.

21—12—50 சங்கத்தில் இரண்டாவது முறையாக ஸ்ரீகீதையம்மாள் புதியவகுப்பைஆனந்தமாக ஆரம்பித்தார். வைகுண்டத்வாதசி தினந்தான் பகவான் கீதோபதேசம்செய்த நன்னாள் என்று பெரியவர்கள் ஆராய்ந்து கூறுகிறார்கள்.

26—12—50 கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் சங்கத்திற்கு விஜயம்செய்து சங்கத்தில் ஹிந்தி பாஷையில் தேறிய மாணவிகளுக்கு யோக்யதாபத்திரம் வழங்கி ஆசீர்வதித்துப் பேசினார்.

14—1—51 மாலை, ஸ்ரீமான் ஸ்ரீரங்கம் சடகோபாசார்யர்ஸ்வாமியின் தலைமையில் திருப்பாவை சாத்துமுறை — ஆண்டாள் திருக்கலியாண மகோத்ஸவம்—பண்டிதராமாநுஜாசாரியர் ஸ்வாமியால் நடைபெற்றது.

19—1—51 தைவெள்ளிக்கிழமை விழா ஸ்ரீமதி ராஜி நாராயணஸ்வாமி—வாய்ப்பட்டும், கமலா சுப்ரமண்யன் பிடில், ராமதுரை மிருதங்கமும் கூடிய வெகு அற்புத இசைவிருந்துடன் ஆரம்பமாகியது. உபயத்தை பாலிகா கழகம் நடத்தியது.

25—1—51: மோகினியில் வெளியான ப்ரபஞ்சலீலை என்கிற அத்புதமான சமூக சித்திரத்தை சங்கத்தின் திறமைவாய்ந்த அங்கத்தினர்கள் நாடகமாக நடித்து அபாரமான சபாஷ்பெற்றார்கள். நாடகத்திற்கு பண்டிதை கிருஷ்ணவேணியம்மாள் தலைமைவகித்து மிகவும் சந்தோஷத்துடன் அனுபவித்துப் பேசினார். பிறகு நடித்தவர்களனைவருக்கும் ஸ்ரீமகாலக்ஷ்மியின் படமும் வெள்ளிச்சிமிழும் பரிசுகள் வழங்கப்பட்டன. வெகு உத்ஸாகமாயும் பொதுஜன ரஞ்சகமாயும் நாடகம் நிறைவேறியது.

26—1—51: காலை 9 மணிக்கு ஸ்ரீ கனகம்மாள ஜகன்னாதாசாரியர் அவர்கள் கொடிஏற்றுவிழாவுடன் குடியரசுதினம் கொண்டாடப்பட்டது. மாலை திருச்சிராப்பள்ளி, ஸ்ரீமதி கைலாசம் மகாதேவன் அவர்களின் வாய்ப்பாட்டும், கமலா சுப்ரமண்யனின் பிடிலும், ஸ்ரீராமதுரை மிருதங்கமும்...கஞ்சிராவும்,